# முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி



ண்ணா 54வது பிறந்தநாள் சிறப்பிதழ் • 1962 • விலை 50 காசு.



விடுதலைக் கிளர்ச்சியில் எதிர்பார்க்க வேண்டிய
அடக்குமுறை அவிழ்த்துவிடப்படும் வேளை நெருங்கிக்
கொண்டிருக்கிறது. தம்பீ! என்ன சொல்கிறாய்?
முதல் பந்தியா? பிறகா? வேண்டவே வேண்டாமா?
பதில் சொல்லிவிடு! மணி அடித்து விட்டார்கள்!

# திராவிடத்து லெனின்

# புதுமல

அன்புத் தம்பி மாறனுக்கு,

திருச்சி சிறைக் கோட்டத்திலிருந்து உனக்கு எழுதும் இந்தமடல் மூலம் தாயகத்து அண்ணன் தம்பிகள், அக்காள் தங்கைகள், அருமைத் தாய்மார்கள், பெரியோர், உற்றார், உழுவலன்பர் அனைவரிடமும் பேசுகின்ற உணர்வு எனக்குளெழுவதிலே ஆச்சரியமில்லையல்லவா?

நாள்தோறும் நகர்ப்புறங்களிலும், பட்டி தொட்டிகளிலும் சுழன்று, சுழன்று தாயகத்தோரைப் பார்த்திடவும், உரையாடிடவும், மகிழ்ந்திடவும், கொண்ட கொள்கையை நிறைவேற்றச் சூள் உரைத்திடவும், சுடர்முகம் தூக்கிடவுமான நல்வாய்ப்புக்களைப் பெற்றிருந்த நான், நெடிய மதிற் சுவர்களின் உள்ளே அடைபட்டுக் கிடக்க வேண்டுமென்று சட்டம் ஆணையிட்டிருக்கிறது.

சிறை வாழ்க்கை அரசியல் வாதிகளுக்குப் புதிய அனுபவமல்ல!

நூறு நாட்கள்! ஆம்; நான் அனுபவிக்க வேண்டிய சிறைவாசம்! நூறு



நாங்கள் மனிதனுடைய வாழ்வுப் பெரு வெள்ளத்தில் அற்பமான துளிகள்தான். ஆனால், அவை அறப்போர் மறவர்க்குத் தேன் துளிகள்! அதனைச் சுவைத்தவாறு ஆயிரக் கணக்கான வீரர்கள் தமிழக மெங்கனுமுள்ள சிறைக் கூண்டுகளில் சிங்கங்களென உலவிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பெருவாய்ப்பு கிட்டவில்லையே என ஏங்கிய வண்ணம் சிறைச் சாலை மதிற் சுவர்களுக்கு வெளியே இருந்து என் தோழர்கள் விடும் பெரு மூச்சுத்தான் போலும், இங்குள்ள மரஞ் செடி கொடிகளையெல்லாம் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது!

இந்த நூறு நாட்களில் என் மனதில் அலை மோதிக் கிளம்புகின்றன வேதனையெல்லாம் என்ன தெரியுமா?

வீட்டுக்குள் நுழைந்துவிட்டால் போதும்; "தம்பி! தம்பி!" என்று வாய் குளிர அழைத்தவாறு, தள்ளாத வயதிலும் என்னையே வட்டமிட்டுக் கொண்டிருக்கும் என் தாயைப் பிரிந்திருக்கிறேனே என்ற கவலை என்னைக் குடைகிறதா?

மனைவி மக்களின் அன்பு மொழிகளை கேட்கவில்லையே, என்ற வாட்டம் என்னைக் கொட்டிக்கொண்டே யிருக்கிறதா?

அவர்களையும் உங்களையும் பிரிந்திருப்பது வேதனைக்குரியதுதான் என்றாலும் அந்தப் பிரிவை நான் வாடிக்கையாக்கிக் கொண்டு நன்கு பழகிவிட்டேன். என்னைப் பிரிந்திருக்க நீங்களும் பழகிவிட்டீர்கள்.

இந்த நூறு நாட்களிலேகூட இடையிடையே உங்களைச் சிறைச்சாலையில் கண்டு மகிழ்ந்துமிருக்கிறேன்.

ஆனால் யாரை அனுதினமும் சந்தித்துஅளவளாவுவேனோ, யாரிடத்திலே அரசியல் நிலை குறித்தும் நாட்டு நிலை குறித்தும் பல்வேறு கருத்துப் புதையல்களைப் பெறுகின்ற வாய்ப்பை அடிக்கடி பெற்றிருக்கிறேனோ, யாருடைய முகம் பார்க்காமல் ஒரு கிழமை கழிந்துவிட்டால் என்முகம் சுருங்கி விடுமோ, யாருடைய மொழி கேட்டுச் சின்னாட்கள் ஓடிவிட்டால் சிந்தை மிகு நொந்திடுமோ, அந்த அண்ணனை--அந்தத் தலைவனை, சேர்ந்தாற்போல் நூறு நாட்கள் காண முடியாத பெரும் கொடுமை எனக்கு ஏற்பட்டுவிட்டது.

நான் அணிந்திருந்த அணி மணிகள், பூண்டிருந்த பொன்னாபரணங்கள் பல முறை என் உடலிலிருந்து கழற்றப் பெற்றிருக்கின்றன. அந்த நிகழ்ச்சிகள் எனக்கு எந்த உணர்ச்சியையும் உண்டாக்கியதில்லை. இளமையில் என் மேனியில் பூட்டப்பட்டிருந்த நகைகள் அடகுக் கடைக்குப் போவதற்குக்கூட கழற்றப்பட்டதுண்டு! அதுவும் எனக்கு வருத்தம் விளைவித்ததில்லை.

ஆனால் சிறைக் கோட்டத்திற்குள் நுழைவதற்குமுன் என் விரலிலுள்ள கணையாழியைக் கழற்றிடும் போது மட்டும் என் கண்கள் குளமாகிவிட்டன. அன்றொரு நாள் அண்ணன் அணிவித்ததல்லவோ அது? அதனையும் பிரிந்து நூறு நாட்கள் இருக்கவேண்டியதாகி விட்டதே!

இந்த இரு கவலைகளும் இவைகளோடு இணைந்து என் ரத்த அணுக்களில் இரண்டறக் கலந்துவிட்ட இயக்கத்தின் இலட்சிய வெற்றிகள் குறித்த துடிப்பும் என் நெஞ்சில் மோதிக்கொண்டிருக்கிற நேரத்தில்தான் 'முரசொலி' அண்ணா மலருக்குக் கட்டுரை கேட்டு சிறைச்சாலைக்கே நீ கடிதம் எழுதிவிட்டாய். சிறையிலிருந்து மலருக்கு கட்டுரை அனுப்புவது என்பது மிகச் சிரமமான காரியம். அதை விளக்கி எழுதி வந்த நான்தான் கடிதத்தை நீட்டிவிட்டேன். கட்டுரை எழுதுவதாயின் அது அரசினர் அனுமதிபெற்று உனக்கு வந்துசேர மிகத் தாமதமாகி விடும்.

நான் சிறை புகுந்த பிறகு முரசொலியின் தொண்டு பற்றிய

பெருஞ் சிறப்புக்களேயும் புது முறைகளே யும், என்னேக் காணவரும் நண்பர்கள் வாயிலாகக் கேள்விப்பட்டு உன்னேயும் நமது அலுவலகத்துச் சகோதரர்களேயும் பாராட்டிக் கொண்டிருக்கிறேன்.

அண்ணு பிறந்த நாளும், அதனே யொட்டிக் கழகம் பிறந்த நாளும் அத்துடன் முரசொலி பிறந்த நாளும் ஒன்ருக வருவது முரசொலி பெற்ற பேறே யாகும்.

இந்த எழுச்சி மிகு நாளில் நான் அதிகம் சொல்ல என்ன இருக்கிறது.

"சுமந்து பெற்ற மாதா
அரவணேத்த தந்தை
சுகதுக்கங்களில் பங்குபெற
வந்த துணேவி
சுவை மொழியால்
இன்பம்தரும் பிள்ளேகள்
இந்தச் சுற்றமும் படையும்
நாட்டுக்காக புரியவேண்டிய தியாக
நெருப்பின் முன்னே எனக்குச்சர்வ
சாதாரணம்தான்

என்று எண்ணுகிறவனே வீரன்; எனும் தத்துவத்தை நான் புரிந்து கொண்டு தானிருக்கிறேன்.

எனினும்

பற்றும் பாசமும் ரத்தத் தொடர்பும் இருதயத்தில் பிறிட்டுக் கிளம்புவதை மிகச் சிரமப்பட்டு சமாளித்துக் கொள்ளுகிறேன். நான் நடந்து தீர வேண்டிய நெடுவழியை என் கண்ணீர்த் திரை மறைக்காமலிருக்கட்டும்"

"வீரனே!
நெஞ்சின் ஆழத்திலிருந்து கிளம்புப் பெருமூச்சு உன் குடும்பத்தை எண்ணியதால் ஏற்பட்டது என்ருல் அது கொல்லன் துருத்தியிலிருந்து வந்த காற்றுக்குச் சமம்!
"தாயகத்தை எண்ணிக் கிளம்பிய மூச்சென்ருல்; அது புயலுக்குச் சமம்."

இந்த எண்ணப் பேரலேகளுக்கிடையே நான் பெற்ற உறுதியின் அடையாளமாக அடிக்கடி நான் கூறுவது போல,

"என் சவத்தின்மீது தலேவன்
கண்ணீர் சிந்துகின்ற
களச்சாவை. யாசித்தாவது
பெறுவேன்!"

என்பதை சிறைக் கூட்டுக்குள்ளிருந்து கம்பீரமாக கூறிக்கொண்டு இந்தக் கடிதத்தை முடிக்கின்றேன், கட்டுரை எழுத இயலவில்லே.

வாழ்க அண்ணு!
வெல்க நம் இலட்சியம்!!

திருச்சி
மத்திய சிறை | மு. கருணநிதி,
4—9—62.

---

## குறிப்பு:

[முரசொலி மலருக்கு கட்டுரையனுப்புமாறு ஆசிரியர் மு. கருணநிதி அவர்களுக்குத் திருச்சி சிறைச்சாலேக்குக் கடிதம் எழுதியிருந்தோம். அவரும் கட்டுரை அனுப்ப இயலாத நிலேயை விளக்கி நமக்குக் கடிதம் எழுதியிருந்தாராம். அக்கடிதம் சிறை அதிகாரிகள் மூலமாக நமக்கு அனுப்பப்பட்டதாம். கடிதம் சிறைச்சாலேயின் ஐ. ஜி. அவர்கள் அனுமதிக்கு போயிருப்பதாகத் தகவல் கிடைத்தது. ஆனல் இதுவரையில் கடிதம் வந்து சேரவில்லே. சிறையில் ஆசிரியர் மு. க. அவர்களுடன் இருந்து 8—9—62ல் விடுதலேபெற்ற தோழர் காமாட்சி அவர்கள் அந்தக் கடிதத்தை மனப்பாடம் செய்திருந்த காரணத்தால் அதனே நமக்கு எழுதியனுப்பினர். நாடக மேடை அனுபவம் பெற்றிருக்கும் தோழர் காமாட்சியின் மனப்பாடத் திறமையினலும் கருணநிதி அவர்களின் கடிதத்தைப் பிரசுரிக்கும் வாய்ப்பு பெற்றிருக்கிறோம்.

ஜனசக்தி மலருக்கு கம்யூனிஸ்ட் சிறைக்கைதி தோழர் பாலன் அவர்களின் கடிதக் கட்டுரையை அனுமதித்தவர்கள் ஆசிரியர் கருணநிதியின் கடிதத்தை உரிய நேரத்தில் அனுப்பி, அனுமதிக்காதது எந்த வகை ஜனநாயகமோ தெரியவில்லே]

---



# உபஜனாதிபதி வாழ்த்துகிறார்

VICE-PRESIDENT
INDIA
NEW DELHI

September 6, 1962.

Dear Sir,

Thank you for your letter of the 4th inst.

I wish the Special Supplementary Issue of 'Murasoli' success.

Yours faithfully,

Zakir Husain



புதுடில்லி செப்டம்பர், 6. 1962

அன்புள்ள ஸார், உங்கள் 4—ம் தேதி கடிதத்துக்கு நன்றி. முரசொலியின் சிறப்பு இதழ் வெற்றியடைய விழைகிறேன்.

தங்கள், சாகிர் உசேன்.

# சஞ்சீவ ரெட்டி வாழ்த்து



N. SANJIVA REDDY.
CHIEF MINISTER.

HYDERABAD
8th Sep. 1962.

Dear Friend,

Your letter asking for a message is to hand. Though I have fundamental differences with the policy and programme of the Dravida Munnetra Kazhagam, I send my greetings to your Leader, Sri Annadurai on his birthday and wish him long life for serving not only Tamil Nadu but also the whole of India, the existence and glory of which depends on integrity and unity.

Yours sincerely,

(N. Sanjiva Reddy)

Sri M. Karunanithi, M.L.A.,
Editor,
Murasoli,
4/128 Mount Road, Madras 6.

என். சஞ்சீவ ரெட்டி, ஹைதராபாத்
முதலமைச்சர் 8, செப்டம்பர் 1962

அன்புள்ள ஐயா,

வாழ்த்துச் செய்தி கேட்ட உங்கள் கடிதம் கைக்கு வந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையிலும், திட்டத்திலும் எனக்குக் கருத்து வேற்றுமை உண்டு. இருந்தபோதிலும் உங்கள் தலைவர் ஸ்ரீ அண்ணாதுரைக்கு அவரது பிறந்தநாள் அன்று எனது வாழ்த்துக்களை அனுப்புகிறேன். அவர் தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி. எதன் வாழ்வும் புகழும் அதன் ஒருமைப்பாட்டிலும், ஒற்றுமையிலும் சார்ந்திருக்கிறதோ, அந்த அகில இந்தியாவுக்கும் சேவை புரிய அவர் நீடு வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

தங்கள் உண்மையுள்ள
என். சஞ்சீவரெட்டி

ஸ்ரீ மு. கருணாநிதி, எம். எல். ஏ.
ஆசிரியர், முரசொலி,
4—128, மவுண்ட் ரோடு,
சென்னை—6



# சி. பி. ராமசாமி அய்யர் வாழ்த்துகிறார்

DELISLE
OOTACAMUND

September 12, 1962.

Dear Sir,

I am in receipt of your letter of the 4th September and note that you are bringing out a Special Supplementary issue of "Murasoli" to commemorate the birthday of Sri C.N.Annadurai.

Although I differ from him with reference to his programme of constituting a separate Tamil State and personally consider that it will be specially harmful to the Tamils apart from its wider implications, I am fully aware of his oratorical gifts and his organising capacity and I send him, through you, my greetings.

Yours truly,

சி. பி. ஆர்.

டெலிஸ்ல்
உதகமண்டலம்
செப்டம்பர் 12, 1962

அன்புள்ள ஐயா,

தங்கள் செப்டம்பர் 4-ம் தேதிய கடிதம் கிடைக்கப்பெற்று, நீங்கள் ஸ்ரீ சி. என். அண்ணாதுரையின் பிறந்தநாளைக் கொண்டாட முரசொலி சிறப்பிதழ் கொண்டுவருதாக அறிகிறேன்.

தனித் தமிழ்நாடு அமைக்கும் அவரது திட்டம்குறித்து நான் அவரோடுகருத்துவேறுபாடு கொண்டிருந்த போதிலும், அதன் மூலம் ஏற்படும் விளைவுகளன்னியில் அது குறிப்பாக தமிழர்களுக்கு தீமை பயக்கும் என்று என்னைப் பொறுத்தவரையில் கருதுகிற போதிலும் அவரது பேச்சாற்றல்கள் பற்றியும், அமைப்புத் திறன் பற்றியும் நான் முழுதும் அறிந்திருக்கிறேன். உங்கள் மூலம் நான் அவருக்கு என் வாழ்த்துக்களை அனுப்புகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

சி. பி. ராமசாமி அய்யர்

இரா. நெடுஞ்செழியன்

மத்திய சிறைச்சாலை,
சென்னை
8.9.62

## வாழ்த்து

அறிஞர் அண்ணா அவர்களின் ஐம்பத்தி நான்காம் பிறந்தநாளை (15-9-62) ஒட்டியும், தி. மு. கழகத்தின் பதின் மூன்றும் ஆண்டின் நிறைவிழா நாளை (17-9-62) ஒட்டியும் 'முரசொலி' சிறப்பு மலர் ஒன்றை வெளியிடயிருக்கும் இனிய செய்தியறிந்து நான் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவையும், கழகத்தின் ஆண்டு நிறைவு விழாவையும் சிறைக் கோட்டத்திற்குள்ளே இருந்து கொண்டாடும்படியான நிலைமை, அறிஞர் அண்ணா அவர்களுக்கும், அவரைச் சார்ந்த என்போன்ற ஆயிரக்கணக்கான தம்பிமார்களுக்கும் இவ்வாண்டு ஏற்பட்டிருக்கிறது.

சிறைக் கோட்டத்தின் பருத்து நீண்டு வளர்ந்த மதிற் சுவர்களுக்கு இப்பால் உருண்டு திரண்டு வலுத்த இரும்புக் கம்பி கதவுகளுக்கு உள்ளே, எட்டடிக் கொட்டடியில் இருந்து கொண்டு, எழில் கொஞ்சும்-பொலிவு தங்கும்-வலிவு மிளிரும்- வளம் கொழிக்கும் திராவிடத்தையும், கையும் வாயும் கட்டப்பட்டு ஏதும் செய்ய முடியாத அவலநிலையில் இருக்கும் திராவிடத்தின் அடிமை நிலையை அகற்றித் திராவிடத்திற்குப் புத்துயிர் ஊட்டவும், புதுவாழ்வு அளிக்கவும், துடித்துக் கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான கழகக் கட்டிளங் காளையர்களையும் அவர்களுக்கு உறுதுணை புரிய காத்துக்கிடக்கும் வீராங்கனையரையும், ஆதரவு நல்க எண்ணியிருக்கும் பெரியோர்களையும்,

(15 ம் பக்கம் பார்க்க)



# தடை வந்தால்...?

**தே**சிய ஒருமைப்பாட்டுக் கமிட்டி தனது அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டது. பாராளுமன்றத்தில் 'இந்திய யூனியனிலிருந்து அதன் எந்த ஒரு பகுதியாவது பிரிந்து செல்லவேண்டுமென்று யாராவது எழுதினால், பேசினால், கருத்து தெரிவித்தால் அவர்களுக்கு பத்தாண்டுக் காலக் கடுங்காவல் தண்டனை விதிக்கலாம். என்று இந்திய அரசியல் சட்டத்தில் 13-வது திருத்தம் நிறைவேற்றப்படுகிறது. அதன்பிறகு இந்திய யூனியனிலிருந்து திராவிட நாடு விடுதலை பெற வேண்டும் என்பதைத் தலையாய இலட்சியமாகக் கொண்ட தி. மு. கழகத்தின் நிலை என்ன? அதில் அங்கம் வகிக்கும் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆண்-பெண்களின் நிலை என்ன?

—இதைப்பற்றி எழுந்த சிந்தனையின் விளைவுதான் கீழேயுள்ள கற்பனை.

இப்படித்தான் நடக்கும் என்று யாரும் முடிவு செய்துவிடவேண்டாம். ஆனால் இப்படி நடந்தாலும் நடக்கலாம் என்பது ஒரு யூகமே!

என்று நடக்கும் என்று யாரும் கேட்க வேண்டாம். நாளை—அல்லது நாளை மறுநாள்—அல்லது என்றாவது ஒருநாள் இந்தச் சூழ்நிலை உருவாகத்தான் போகிறது என்பது மட்டும் நிச்சயம்!

(பின்வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கற்பனையே தவிர; அது கழகத்தின் கருத்துகள் அல்ல.)

[இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவினை கேட்போருக்குப் பத்தாண்டுக் காலம் கடுஞ்சிறை வழங்க வழிவைத்துத் திருத்தப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு இங்கிலாந்திலிருந்து சென்னை வந்திருக்கும் ஒரு பத்திரிக்கை நிருபர் தி. மு, கழகத்தின் உறுப்பினரான முரசொலி என்பவரை அவரது ஓட்டலில் சந்திக்கும்போது சம்பவம் துவங்குகிறது.]

முரசொலி: வணக்கம்!

நிருபர்; ஓ...... காலை வணக்கம்!......வாருங்கள்......உட்காருங்கள்......உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன்......

[முரசொலி உட்காருகிறான். இப்போது நிருபரின் எட்டு வயதுப் பெண் குழந்தை ஓடிவருகிறது. நிருபர் குழந்தையை அறிமுகம் செய்துவைத்த பின்னர் பேச்சு தொடர்கிறது.]

**மாறன்**



முர : திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி ஓரளவு தெரிந்துவைத்திருப்பீர் களென்று நம்புகிறேன்.

நிரு : நிச்சயமாக ! நான் தாயகத்தில் இருக்கும்போதே இங்கிருந்து வரும் பிரமுகர்களிடம் உங்கள் இயக்கத்தைப்பற்றி விசாரிப்பதுண்டு. உதாரணமாக, மதுரை காங்கிரஸ் மாநாட்டில் 'உள்நாட்டுப் போர் ஏற்பட்டாலும், நாட்டைப் பிரிக்க சம்மதிக்கமாட்டோம்' என்று பண்டித நேரு பேசிவிட்டு லண்டன் வந்தாரல்லவா ?

முர ; ஆமாம் ! அதாவது நீங்கள் சொல்வது நேரு பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லனைச் சந்தித்துவிட்டு, அமெரிக்க ஜனாதிபதி கென்னடியைச் சந்திக்க அமெரிக்கா புறப் படுவதற்கு முன்பு ! விமான நிலையத்தில் கூட சில நிருபர்கள் கூடிக்கொண்டு, 'உள் நாட்டு யுத்தம் யாரோடு ? எப்போது ?'— என்று கேட்டார்கள் !

நிரு : அப்படி ஆர்வத்தோடு விசாரித்தவர் களில் நானும் ஒருவன் !

முர : அண்மையில் பண்டித நேரு காமன் வெல்த் மாநாட்டில் கலந்துகொள்ள லண்டன் விமான நிலையத்தில் வந்திறங்கிய போதுகூட தி. மு. க.-வைப்பற்றி விசாரித் தார்களே !

நிரு ; ஆமாம் ; அந்த நிருபர்கள் கூட்டத் தில் நானும் இருந்தேன் ! சரி...... இப் போது நான் உங்கள் தலைவர் அண்ணாதுரையைச்சந்திக்க வாய்ப்பு கிடைக்குமா?

முர : கிடைக்காதென்றுதான் சொல்லவேண் டும். ஏனெனில் அவர் சிறையில் இருக் கிறார் !

குழந்தை : (குறுக்கிட்டு) ஏன் கொலை செய் தாரா ? கொள்ளை அடித்தாரா ?

முர ; இல்லையம்மா ! எங்கள் அண்ணன் வன்முறையைப்பற்றிக் கனவிலும் கருதா தவர். அவர் நல்லவர் ; மிகவும் நல்லவர். உனக்குப் புரியும்படி சொல்லவேண்டு மானால் அவர். தென்னாட்டின் காந்தி !

குழந்தை : ஓ...... இப்போது தெரிகிறது, அவரை ஏன் சிறையில் அடைத்திருக் கிறார்கள் என்று !

முர : (வியப்போடு) ஏனம்மா !

குழந்தை : காந்தியைப்போல் இருக்கும் அவரைச் சிறையிலே அடைத்தால், அவர் அங்கிருக்கும் பல குற்றவாளிகளை யெல் லாம் திருத்தி, நல்லவர்களாக்கி விடுவார் அல்லவா ! அதனால்தான் அவரைச் சிறை யிலே போட்டிருக்கிறார்கள் !

(எல்லோரும் சிரிப்பு)

நிரு : சரியம்மா...... நீ போய் வெளியே விளையாடு...

[என்று அனுப்பிவிடுகிறார்]

நிரு : மன்னிக்கவேண்டும் ; என் குழந்தை மிகவும் ஆர்வமுள்ளவள் !

முர : பரவாயில்லை ; இன்று நாட்டிலே மூலை முடுக்கெல்லாம் கேட்கப்படும் கேள்வி யைத்தான் அவளும் கேட்டிருக்கிறாள். உம்......நீங்கள் பேச்சைத் தொடருங்கள்!

நிரு : உம்...... இந்திய யூனியனிலிருந்து பிரி வினை கேட்பது பெரிய குற்றம் என்றும், அதற்குப் பத்து ஆண்டுகள் வரை கடுங் காவல் தண்டனை தரலாம் என்றும், இப் போது இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தியிருக்கிறார்கள்.இனி மேற்கொண்டு உங்கள் நடவடிக்கை என்ன ?

முர : என்றையதினம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவினை கேட்பதைக் குற்றமாக்கும் விதத்தில் திருத்தப்பட் டதோ, அன்றையதினம் எங்கள் இலட்சிய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தினமாகும். 'நலங்கு இல்லாமல் கல்யாணமேது? கல் யாணம் ஆகாமல் சீமந்தம் ஏது? அடக்கு முறையில்லையேல் விடுதலை இயக்கம் ஏது?' என்று முன்பே எங்கள் அண்ணன் கூறி யிருக்கிறார்.

முர : நண்பரே! இந்தத் தடைச் சட்டத்தை நாங்களும் அப்படித்தான் கருதுகிறோம். இதுவரையும் சாதாரண அரசியல் கட்சி யாகக் கருதப்பட்டு வந்த எங்கள் இயக்கம் இனி மனிதனுக்கு விடுதலை யுணர்வு உள்ளவரை நிலைத்து நிற்கக்கூடிய உலகத்தில் உள்ள பல்வேறு விடுதலை இயக்கங்களின் பட்டியலிலே இடம் பெறும். ஆமாம். நண்பரே! இந்தியப் பாராளுமன்றத்திலே பெரும்பான்மை யோர்கூடி அரசியல் சட்டத்தைத் திருத்த வில்லை; திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு மகத்தான விடுதலைஇயக்கம் என்று முத்திரை குத்தி, விடுதலை இயக்கமாய் இருக்க எங்களுக்குத் தக்க பருவம் வந்து விட்டது என்பதை உலகத்திற்குப் பிரகட னம் செய்திருக்கிறார்கள்!

நிரு : பிரிவினை கேட்பதைத்தான் குற்ற மென்று ஆக்கியிருக்கிறார்களே தவிர; இதுவரை தி. மு. கழகம் தடை செய்யப் பட்டதாக அறிவிப்பு வரவில்லையே!

முர: பாலுக்கு விதிக்கப்பட்ட தடை தயிருக்கும், மோருக்கும், வெண்ணெக்கும், நெய்க்கும் விதிக்கப்பட்ட தடைதானே, நண்பரே! திராவிட முன்னேற்றக் கழகத்தின் முழு முதற் கொள்கையே திராவிட நாடு கேட்பதுதானே! எனவே பிரிவினே கேட்பவர்களை மட்டும் தண்டிக்கும் அரசாங்கம் பிரிவினே கேட்கும் ஒரு பெரிய இயக்கத்தை விட்டு வைப்பதுபுத்திசாலித்தனம் என்று கருதுகிறீர்கள்?

எனவே எங்கள் ‘போர் முறையைத் தெரிந்துகொண்டு இன்னும் சில நாட்களில் தி. மு. கழகத்தையும் தடை செய்து விடுவார்கள்!

நிரு: போர் முறை என்று குறிப்பிட்டீர்களே: அது என்ன?

முர: அதாவது புலி பதுங்குகிறதா, பாய்கிறதா, பின்வாங்குகிறதா—என்பதைத் கொஞ்ச நாட்கள் கவனித்துவிட்டுத்தான் பிறகு தி. மு. கழகத்தைத் தடை செய்வார்கள் என்கிறேன்!

நிரு: சரி; தி. மு. கழகம் என்கிற புலி அரசியல் சட்டம் பிரிவினே கேட்பதைக் குற்றமாக்கித் திருத்தப்பட்டதைத் தொடர்ந்து பதுங்குமா? பாயுமா? பின்வாங்குமா?

முர: பின்வாங்கினுல் அது புலியாகாது; ஏதாவது காரணங்களை முன்னிட்டு அது பதுங்கினுல் அதுபாய்வதற்குத்தான்!

நிரு: அதாவது, தி. மு. கழகத்தில் அங்கம் வகிக்கும் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட அத்தனை உறுப்பினர்களும், ஒரே நேரத்தில் அரசியல்சட்டத் திருத்தத்திற்கு எதிராக திராவிட நாடு திராவிடருக்கே என்று முழங்கி, பத்து ஆண்டுசிறைத்தண்டனையை ஏற்பார்களா?

முர: தி. மு. கழகத்தின்உறுப்பினர் சீட்டில் எப்போது கையெழுத்துப் போட்டார்களோ, அப்போதே அவர்களுக்கு அதன் பூரண்விளைவுகளும் தெரியும்! எங்கள் அண்ணனைப் பின் தொடர்ந்தால் பதவி கிடைக்காது; பர்மிட் கிடைக்காது; இகபரசுகவாழ்வு கிடைக்காது; பசி—பட்டினி—சிறை-தூக்குமேடை—இவைதான் கிடைக்கும் என்று அத்தனை இலட்சம் பேர்களுக்கும்தெரியும்!

நிரு: பின்வாங்குகிறவர்கள் யாரும், இல்லையா?

முர: இருந்தார்கள், தடையென்றுல் தொடைநடுங்கும் அந்த முதுகெலும்பில்லாக் கோழையர்கூட்டம் முன்பே போய்ச்சேர வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டது!

நிரு: சரி; தயவுசெய்து உங்கள் போர்முறையைக் கொஞ்சம் விளக்குங்கள்!

முர: ஒரு விடுதலை இயக்கத்துக்கு வேண்டிய மூலதன எது?

## மக்கள் ஆதரவு!

பொதுமக்கள் மனுேநிலைதான் உங்களுக்குத் தெரியுமே! ஒரு அறிஞர் சொன்னபடி பொதுமக்கள் என்போர் கழுதைகள் — பொறுமை விஷயத்தில்! ‘அதோ, பார்! உன் தலையில் மிளகாய் அறைக்கிருன்!’ என்று நாலு பேர் சொல்கிற வரையில் தூங்கிக்கொண்டிருக்கும் பண்பு பெற்றவர்கள்! ஆண்டாண்டுகாலமாக அடிமைச் சகதியிலே உழன்றுகொண்டிருக்கும் அவர்களுக்கு சுதந்திரத்தின் மதிப்புதெரியாது! எனவே மக்களைத் தட்டி எழுப்புவதற்கு முக்கியத் தேவை பிரச்சாரம்!

தி. மு. கழகத்தின் ஒவ்வொரு அசைவும் மக்கள் ஆதரவு பெறும் நோக்கத்தைத் தான் இலக்காகக் கொண்டது! எனவே, அதற்குக் கருவியான பிரச்சாரம் கௌரவமான வழிகளில் கிடைக்குமேயானுல் நாங்கள் விட்டுவிடமாட்டோம்!

நிரு: என்ன செய்வீர்கள்?

முர: ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட எங்கள் உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஒரே நேரத்தில் சிறை செல்வதால் அந்த இலக்கு நிறைவேறுது. எனவே நாங்கள் யார் யார் எப்போது சிறை செல்லவேண்டும் என்பதற்குப் பட்டியல் தயாரித்து வைத்திருக்கிறேும்!

நிரு: ஓகோ!

முர: அதன்படிதான் எங்கள் தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் அரசியல் சட்டத்தின் புதிய திருத்தத்தை, முன்னறிவிப்பு செய்துவிட்டு சென்ற கிழமை, சென்னை கடற்கரையிலே நடந்த மாபெரும் கூட்டத்தில் மீறி இந்திய யூனியனிலிருந்து திராவிட்நாடு விடுதலை பெற்றுப் பிரியவேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்திக் கைது செய்யப்பட்டு, பத்து ஆண்டுக் கடுங்காவல் தண்டனையை ஏற்றுள்ளார்கள்!

நிரு: மற்ற தலைவர்கள்?

முர: மாதத்திற்கு ஒரு முறைதான் தலைவர்களுக்கு முறை வரும். அடுத்த மாதம் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அரசியல் சட்டத்தின் புதிய திருத்தத்தைமீறி வேலூரிலே திராவிடநாட்டுப் பிரிவினையை வற்புறுத்தி, பத்தாண்டுகால சிறைத் தண்டனையை ஏற்பார்! அதற்கடுத்த மாதம் கலைஞர் கருணுநிதி தஞ்சையில்! பிறகு மதியழகன் கோவையில்! பேராசிரியர் அன்பழகன் மதுரையில்!...

நிரு: ஓகோ! ஒரே நேரத்தில் இல்லாமல் மாதர மாதம்

பெரிய தலைவர்கள் இப்படி அரசியல் சட்டத்தின் புதிய திருத்தத்திற்கு எதிராக சிறைத் தண்டனை ஏற்பதன் மூலம், நாட்டிலே பெருமளவு நீண்டகாலப் பிரச்சாரத்தையும், அதன் மூலம், மக்கள் ஆதரவையும் பெறமுடியும் என்று திட்டமிட்டிருக்கிறீர்களா?

முர; ஆமாம்;

நிரு: ஒரு மாத இடைவெளியில் இதர தோழர்கள் என்ன செய்வார்கள்?

முர: நெடுங்காலச் சிறைத் தண்டனை ஏற்போர் பட்டியலில் இடம் பெற்றுள்ள கழகத் தோழர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் பாத யாத்திரை சென்று, கிராம மக்களிடையே திராவிடரின் வரலாற்றைக் கூறுவார்கள்.

நிரு: திராவிடநாட்டுப் பிரிவினையா?

முர: இல்லை, இல்லை. பிரிவினை பற்றி வாய் திறந்தால்தான் அந்த இடத்திலேயே கைதாகி விடுவார்களே! எனவே அதைப் பற்றிப் பேசாமல் நமது பண்பாட்டின் பெருமை, நமது கலாச்சார உயர்வு முதலியவை பற்றிப் பேசி, வரும் ஞாயிறன்று நமது வட்டத் தலைநகரில் நடைபெறும் முக்கிய கூட்டத்தில் பேசி நான் கைதாக இருக்கிறேன்; அவசியம் வாருங்கள்!"—என்று பேசுவார்கள்.

நிரு: அது என்ன முக்கிய கூட்டம்?

முர, அரசியல் சட்டத்தின் புதிய திருத்தத்தை மீறும் கூட்டம்தான்! ஒவ்வொரு வாரத்திலும், அந்தந்த வட்டத்திலுள்ள கழகத்தோழர் ஆறு நாட்கள் பாத யாத்திரை நடத்திப் பிரச்சாரம் செய்துவிட்டு, ஏழாவது நாள் வட்டத் தலைநகரில் பகிரங்கமாக பிரிவினை பற்றிப் பேசி கைதாகி விடுவார்கள்!

நிரு: ஓகோ! மாதம் ஒருமுறை பெரிய தலைவர்கள் கைதாவர்! வாரம்ஒருமுறை ஒவ்வொரு வட்டத்திலும் தொண்டர்கள் கைதாவர்!-அப்படித்தானே?

முர: ஆமாம்! அதாவது மக்கள் ஆதரவு திரட்ட பிரச்சாரம்தான் முக்கிய தேவை என்று முன்பே கூறியிருக்கிறேனே!

நிரு: தி. மு. கழகத்தில் அங்கம் வகிக்கும் அத்தனை பேரும் இப்படிக் கைதாவது தான் உங்கள் திட்டமா?

நிரு: காங்கிரஸ் முன்பு நடத்திய தனி நபர் சத்யாக்கிரகத்தைப் போல...

முர, ஆமாம்.

முர: இல்லை; நீண்டகால சிறைத் தண்டனை ஏற்கத் தயாராக இருப்போர் அப்படிச் செய்வர்! மீதமுள்ளோர் வேறு வேலையில் ஈடுபடுவர்!

நிரு: வேறு வேலை என்றால்... பயங்கரவாதிகளாகமாறி நாச வேலையில் ஈடுபடுவார்களா?

முர: சே, சே! அத்தகைய பெருமை ஆகஸ்ட் வீரர்களுக்கே இருக்கட்டும்! எங்கள் நாட்டு விடுதலைக்கு எங்கள் அண்ணன் தேர்ந்தெடுத்திருப்பது வேட்டு முறை அல்ல, நண்பரே! ஓட்டு முறை! அந்த அறவழி ஓட்டு முறைக்கு முன்னால் வீராதி வீர-வீரமார்த்தாண்டபிரிட்டிஷ் சாம்ராஜ்யமே சாய்ந்திருக்கிறது என்றால்; இவர்கள் எம்மாத்திரம்!

நிரு: சரி; வேறு வேலை என்றீர்களே; அது என்ன என்பதை தயவு செய்து விளக்குகிறீர்களா?

முர: அவை என்னென்ன என்பது பற்றி முடிவு செய்யத்தான் அடுத்த கிழமை சென்னையிலே தி. மு. கழகத்தின் பொது மாநாடு கூடுகிறது.

நிரு: முன்பு மதுரையில் நடந்ததே; அதுபோலவா?

முர: ஆமாம்!

நிரு; தி. மு. கழகம் இன்றோ-நாளையோ தடை செய்யப்படலாம் என்று சற்று முன்பு தானே சொன்னீர்கள்!

முர! ஆமாம்: தடை செய்யப்பட்டாலும் சென்னையிலே தி. மு. கழக மாநாடு நடக்கும். உலகத்தின் எந்த சக்தியாலும்அதைத் தடுத்து நிறுத்த முடியாது!

நிரு: ஆ! எப்படி அது சாத்யம்? கொஞ்சம் விளக்குகிறீர்களா?

முர; நண்பரே! வரலாற்றில் முன்பு நடந்த நிகழ்ச்சியை விளக்குகிறேன், கேளுங்கள்! முன்பு காந்தியார் துவங்கிய ஒத்துழையாமை இயக்கத்தின்போது 1932 ஜனவரி முதல் டிசம்பர் முடிய ஒரே ஆண்டில் உபகண்டம் முழுவதும் 66,946 காங்கிரஸ் தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள். அப்போது வங்கத்தில்தான் அதிகமான அடக்குமுறை தாண்டவமாடியது. எனவே வங்கத்தின் தலைநகரான கல்கத்தாவிலேயே காங்கிரஸ் தனது வருடாந்திர மாநாட்டைக் கூட்டுவதென்று முடிவு செய்தது. அரசாங்கம் இதைத் தடுத்து மாநாடே நடத்த முடியாதவாறு முடிவெடுத்தது; (1) மாநாட்டின் வரவேற்புக் குழு சட்டவிரோதம் என்று பிரகடனப் படுத்தப்பட்டு, அதன் தலைவரும் செயலாளரும் கைதானார்கள். (2) காங்கிரஸ் மாநாட்டோடு தொடர்பு வைத்துக்கொண்டிருப்பதாகச் சந்தேகிக்கப்பட்ட அத்தனை பேரும் கைதானார்கள். (3) காங்கிரஸ் மாநாட்டில்

கலந்து கொள்கிறவர்கள் என்று சந்தேகப்படுகிறவர்களுக்கு புகைவண்டி நிலையங்களில் டிக்கெட் கொடுக்கக்கூடாது என்று ரயில்வே நிர்வாகம் உத்தரவு போட்டது (4) காங்கிரஸ் மாநாட்டின் பிரதிநிதிகள் தங்க இடமளித்தால் அவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று கல்கத்தா நகரவாசிகள் எச்சரிக்கப்பட்டார்கள். (5) மாநாட்டின் தலைவரான திரு. மதன்மோகன் மாளவியாவுக்கு அவர் தலைமை வகிக்க அனுமதிக்கப்படமாட்டார் என்கிற உத்தரவு அனுப்பப்பட்டது. (6) வேறு வழிகளில் டிக்கெட் வாங்கி கல்கத்தா நோக்கிப் பிரயாணம் நடத்திய காங்கிரஸ் பிரதிநிதிகள் வழியிலேயே கைது செய்யப்பட்டார்கள் (7) அதிகாரிகளின் உத்தரவைத் துச்சமாக மதித்த தலைமை வகிக்கக் கல்கத்தாவிற்குப் புறப்பட்ட மாளவியா அசன்சால் என்னுமிடத்தில் கைது செய்யப்பட்டார். (8) காங்கிரஸ் மாநாடு எங்கு நடக்கும் என்று அரசாங்கத்திற்குத் தெரியாத காரணத்தால், கல்கத்தா நகரில் உள்ள 59 பூங்காக்களும் பொதுமக்கள் உள்ளே நுழையாவண்ணம் போலீசாரால் காவல் காக்கப்பட்டன.

நிரு; உம்... மாநாடு நின்றுவிட்டதா?

முர; நிற்குமா? மொத்தமுள்ள 2,500 பிரதிநிதிகளில் 1,500 பேர் இந்திய உபகண்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் எப்படியோ கல்கத்தா வந்துவிட்டார்கள்.

நிரு; பிறகு?

முர; அந்த 1,500 பேருக்கும் நேர்ந்த கதியை நினைத்தாலே நெஞ்சு நடுங்குகிறது! அரசாங்க உத்தாவை மீறி, கல்கத்தா நகரவாசிகள் பலர், காங்கிரஸ் பிரதிநிதிகள் பலருக்குப் புகலிடம் கொடுத்தார்கள்! இருந்தாலும் வீடு-வீடாகச் சோதனை போட்டு, போலீசார் அந்தப் பிரதிநிதிகளைப் பிடித்துச் சென்று, சித்ரவதை செய்தார்கள்! மிருகத்தனமாகத் தாக்கினார்கள்! மயக்கம் வந்து பிரக்ஞையற்றுத் தரையில் விழும்வரை பிரம்பாலும், தடியாலும் மாறி-மாறித் தாக்கினார்கள்!

நிரு; நிஜமாகவா?

முர; ஆம், நண்பரே! அவர்களில் பலர் நிரந்தரமாக முடமானதாக மாளவியா பின்னால் விடுத்த அறிக்கையில் கூறியிருக்கிறார்! ஆக—இப்படிக் கைதாகிச் சித்ரவதை அனுபவித்தவர்கள் 750 பேர்!

நிரு: மீதமுள்ள 250 பிரதிநிதிகள் என்ன ஆனார்கள்?

முர; போலீசாரின் கழுகுப் பார்வைக்குத் தப்பிய அவர்கள் எப்படியோ காங்கிரஸ் மாநாட்டிற்குப் போய்விட்டார்கள்!

நிரு; என்ன? இந்த அமளியில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றதா?

முர; ஆம்! அப்பாவிப் போலீசார் கல்கத்தாவில் உள்ள பூங்காக்களைக் காவல்காத்து நின்றார்கள். மாலை 3 மணிக்கு மாநாடு ஆரம்பம் என்று தெரியும். பூங்காக்களில் காவலை மீறி யாரும் நுழையாத காரணத்தால் மாநாடு நின்றுவிட்டது என்று முடிவுக்கு வந்தார்கள்;

நிரு; பிறகு?

முர; சரியாக மூன்று மணிக்கு—குறித்த நேரத்தில், குறித்த இடத்தில்—மாநாடு துவங்கியது!

நிரு; எங்கே?

முர. கல்கத்தாவில் 'எஸ்பளனேடு' பகுதி தெரியுமா?

நிரு; கல்கத்தாவிலேயேபோக்குவரத்து நெருக்கடி மிகுந்த சுறுசுறுப்பான பகுதி அது தானே! சென்னையில் உள்ள சைனு பஜார் போன்றது அது!

முர; அங்குதான் மாநாடு துவங்கியது. திருமதி நெல்லி சென்குப்தா என்ற பெண்மணி தலைமை வகித்தார். 250 பிரதிநிதிகள் அதில் கலந்துகொண்டனர். ஏராளமக்கள் பார்வையாளராக வந்திருந்தனர். தலைவர் அமைதியாகத் தனது தலைமையுரையை முடித்தார். பிறகு அவசர அவசரமாக ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன அடுத்த தீர்மானத்தைப் படிக்க ஒருவர் எழுந்தார், 'திபு திபு' என்று போலீசார் நுழைந்தனர்.

நிரு; பிறகு?

முர; இருங்கள்! கொஞ்சம் தண்ணீர் குடித்துக்கொள்கிறேன்,

(என்று நீர் பருகுகிறார்)

நிரு; அட, சீக்கிரம் சொல்லுங்களய்யா!

முர; நண்பரே! அந்த அதிஉன்னதக் காட்சியை எப்படி வர்ணிப்பேன்? அதை நினைக்கும்போது ஏற்படும் எழுச்சியில் என் இருதயம் வேகவேகமாக அடித்துக்கொள்கிறது. என் நரம்புகள் துடிக்கின்றன. என் கண்கள் சிவக்கின்றன.

நிரு; ஆர்வத்தை மேலும் அதிகமாக்குகிறீர்களே! தயவு செய்து மேலே சொல்லுங்கள்...போலீஸ் வந்தது... பிறகு...சொல்லுங்களய்யா!

முர; முன்னறிவிப்பு ஏதுமின்றி இடிமின்னலோடு பெருமழை பெய்வதுபோல போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர் பார்வையாளராக வந்திருந்த மக்கள் இரத்தக் காயத்தை பெற்றுக்கொண்டு மூலைக்கு ஒருவராக ஓடினர்.

இருந்தாலும் எட்டாவது தீர்மானத்தைமுன் மொழிவதற்காக எழுந்த பிரமுகர், எதுவும் நடக்காததுபோல தீர்மானத்தைப் படித்துக் கொண்டிருந்தார். போலீசார் அவரைத் தடியால் அடிக்க, அவர் தரையில் விழுந்தார். அவரைப் போலீசார் கைது செய்து வாகனத்துக்கு அழைத்துச் செல்வதற்குள் இன்னொரு பிரமுகர் எழுந்து அவசரமாகத் தீர்மானத்தை முன்மொழிந்தார்! இப்படி ஒருவர் விழுந்ததும் இன்னொருவர் தீர்மானங்களைப் படித்துக்கொண்டே வந்தனர்,

ஒரு பிரதிநிதி அவர் அஞ்ஞா என்கிற நகரத்திலிருந்து வந்த பிரபல வக்கீல்—தொடர்ந்து தன்மீது விழும் தடியடிகளைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் தீர்மானத்தைப் படித்துக் கொண்டே வந்தார். இறுதியில் ஒரு காட்டுமிராண்டி அதிகாரி தடியால் அவர் முகத்தில் அடித்தான்! அய்யகோ! அந்த வக்கீலின் மூக்குக் கண்ணாடி நொறுங்கி ஒரு பக்கத்து விழிக்குள் பாய்ந்தது. 'வந்தே மாதரம்' என்று முழங்கியவாறே அவர் தரையில் சாய்ந்தார். உடனே வேறொருவர் எழுந்து தீர்மானத்தை அவர் விட்ட இடத்திலிருந்து மேலும் தொடர்ந்து படித்தார்...அடடே...ஏன் அழுகிறீர்கள்?

நிரு; (கரகரத்த குரலில்) என்னால் தாங்கமுடியவில்லை ...ஆனந்தக் கண்ணீர் ஆறுகப் பெருகுகிறது...நான் நிச்சயமாகச் சொல்கிறேன். நண்பரே, விடுதலை இயக்கத்தைச் சாய்ப்பதற்கு உலகத்தின் எந்த சக்திக்கும் வலுவில்லை!

முர: ஆம்; மூக்குக் கண்ணாடி உடைந்துவிழிகள் குருடானாலும், கொண்ட கொள்கை மாறாத அஞ்ஞா நகரத்து வக்கீல்கள்—கையிலே கொடியுடன் மெய்யிலிருந்து உயிர் பிரியும் வரை இலட்சிய முழக்கமிட்ட திருப்பூர் குமரன்கள்—இன்று எங்கள் அண்ணனுக்குத் தம்பிகளாக இருக்கிறார்கள்! நண்பரே, நீர் சொல்லும்—' இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?'

நிரு: நிச்சயமாக, ஜெயம் உங்களுக்குத்தான்!

முர: நன்றி, அய்யா; உமது வாழ்த்திற்கு மிகவும் நன்றி.

நிரு; சரி; இதற்கெல்லாம் முடிவு எப்போது?

முர: எதற்கு?

நிரு; அதாவது, உங்கள் தலைவர் அண்ணாதுரை பத்தாண்டு சிறைத் தண்டனை ஏற்று அனுபவிக்கிறார்; அவரைத் தொடர்ந்து இன்னும் சில மாதங்களில் மேலும் பல தலைவர்களும், தொண்டர்களும் சிறை செல்வார்கள். தி. மு. கழகமும் தடை செய்யப்பட்டுவிட்டது. இந்தக் குழப்ப நிலையில் தனி நபர்கள் வேண்டுமானால் பிரச்சாரம் செய்யலாமே தவிர; ஸ்தாபன ரீதியாக நீங்கள் மக்களுக்கு வழி காட்ட முடியுமா? அரசியல் அரங்கில் தி. மு. கழகத் தடையால் தற்காலிகமாக ஏற்பட்டிருக்கும் காலி இடத்தை வேறு கட்சிகள் பிடித்துவிட்டால்?

முர; நண்பரே! தென்னகத்தில் ஏக இந்தியம் பேசும் எந்தக் கட்சியும் இனித் தலைதூக்க முடியாது. தி. மு. கழகம் தடை செய்யப்பட்டால் அரசியல் அரங்கில் அந்த இடம் காலியாகும்; உடனே பிடித்துக்கொள்ளலாம் என்று யாரும் எதிர்பார்த்தால் அவர்கள் நிச்சயம் ஏமாந்துபோவார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தடை செய்யப்பட்டால் 'முன்னேற்ற திராவிட கழகம்' என்று அது உருமாறுவதற்கு எவ்வளவு நேரமாகும்?

நிரு; ஓகோ... தி. மு. கழகம் பெயர் மாறிவிடுமோ?

முர; அய்யோ! தயவுசெய்து அப்படி எண்ணாதீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட ஒரு புனிதமான அமைப்பு. உருமாறும் பச்சோந்தித் தன்மையை அதற்குக் கற்பித்துத் தயவுசெய்து அதன் புனிதத்தன்மையைக் கெடுக்க முயற்சிக்காதீர்கள்!

நிரு; மன்னிக்கவும். நீங்கள் சொல்வது......

முர; கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். தரைப் படை, கடல் படை, விமானப் படை என்று இராணுவத்திலே பல பிரிவுகள் இருக்கின்றன அல்லவா? மலையும் மலை சூழ்ந்த இடமும் உள்ள இடத்திற்கு கப்பல் படையை எப்படி அனுப்ப முடியும்?

நிரு; அதுபோல?

முர; தி. மு. கழகத்தின் ஒரு படை புதிய அரசியல் சட்டத்தின் திருத்தத்தை மீறியோ, அல்லது தடை செய்யப்பட்ட தி. மு. கழகத்தின் உறுப்பினர் என்று மார் தட்டிச் சொல்லியோ எறும்பு வரிசை போல சிறைக்குப் போய்க் கொண்டே இருக்கும். இன்னொரு படை அப்படித் தொண்டர்களைத் தயார் செய்து தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்குச் சிறைக்கு அனுப்பிக்கொண்டே இருக்கும்.

நிரு; அது என்ன — ஐந்து ஆண்டுக் கணக்கு?

முர; சொல்கிறேன், பொறுங்கள்! இதற்கிடையில் தி. மு. கழக ஆதரவாளர்கள் சும்மா யிருப்பவர்கள் என்று நினைக்கிறீர்கள்?

(39-ம் பக்கம் பார்க்க)

(16-ம் பக்கத் தொடர்ச்சி,

நிற்கும் ஏணை (தொட்டில்) என்பர் சிறையை. அந்த சிறையில் அண்ணனும் அவர் தம்பியரும் இருக்கின்றோம். விடுதலைக்கு நாம்தரவேண்டிய விலையில் இது நூற்றிலொன்று; இல்லை - ஆயிரத்திலொன்றாகத்தானிருக்கமுடியும்.

விடுதலைப் பாதையில் முதலடி எடுத்து வைத்திருக்கின்றோம். செல்ல வேண்டிய தூரத்தின் எல்லை இன்னும் கண்ணுக்குத் தெரியவில்லை; தொடருகின்ற இந்தப் பயணத்தை உன் முழக்கத்தால் ஊக்கப்படுத்து; நாம் உரிமை கோருவது தஸ்தாவேஜு இல்லாத சொத்துக்களல்ல; சரித்திரம் படைத்த ஒரு திருநாட்டிற்கு அந்த சரித்திர அறிவில் தரித்திரமானவர்கள், வீசுகின்ற புயலுக்கு விசிறியும், வெடிக்கின்ற எரிமலைக்குத் தீக்குச்சியும் தேவையில்லை என்பதை உணராமல் விடுதலைப் படைக்குத் தடைபோடவும் தேர்தல் உரிமையைப் பறிக்கவும் துடிக்கின்றனர். அவர்கள் அறியாமைக்கு இரக்கப்படுவோமாக!

நெஞ்சிலுரமும், நேர்மைத் திறமும் கொள்கை பலமும் வாய்த்த விடுதலைப் படைக்குமுன் ஆயிரந் தடைகள்வரினும் அத்தனையும் தூள்! தூள்!! இழந்துவிட்ட உரிமையை, மறந்துவிட்ட உணர்வைப் பெறத் துடிக்கின்ற புதிய சமுதாயமே வாழ்க! அன்புக்கு ஒருவர், ஆற்றலுக்கு நிகர், குணத்திற்கு ஒரு குன்று, கொள்கைக்குச் சிகரம், எண்ணத்தில் பெரிய நம் அண்ணன் வாழியரோ!!

நாம் கொண்டாடவேண்டிய வெற்றித் திருநாளுக்கு முன் ஒத்திகையாகட்டும் வருகின்ற செப்டம்பர் 17!

வெல்க திராவிடம்!

**புலவர் ஏ. கே. வேலன்**

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தாய்மார்களையும் எண்ணி, எண்ணி இறும்பூதெய்திக் கொண்டிருக்கிறோம்.

வேலூர் சிறைக்கோட்டத்தில் தலைதாழாச் சிங்கம்போல் கிடக்கும அறிஞர் அண்ணா அவர்களும், பிற சிறைக் கோட்டங்களில் கிடக்கும் என்னைப் போன்ற நண்பர்களும், வெளியில் இருக்கும் பல இலட்சக்கணக்கான கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் ஒருவரையொருவர் நேரில் கண்டு அளவளாவி, ஆடிப்பாடி மகிழ்ந்து விழாவினைக் கொண்டாடும் வாய்ப்பு இவ்வாண்டு ஏற்படவில்லை. ஆனால், நமது உள்ள உணர்ச்சிகள் ஒன்றையொன்று எட்டிப் பிடிக்கவும், அறிந்துகொள்ளவும், புரிந்துகொள்ளவும் ஆற்றல் பெற்றவைகளாகும். அவற்றைச் சிறைக் கோட்டத்தின் நீண்ட மதிற்சுவர்களோ, அன்றிவலுத்த இரும்புக் கதவுகளோ, அன்றி அறையின் பருத்த சுவர்களோ தடுத்து நிறுத்த இயலா.

நாம் அறிஞர் அண்ணா அவர்களை அவரது பிறந்தநாள் விழாவை ஒட்டி வாழ்த்திக்கொண்டிருக்கிறோம்: அதை அறிஞர் அண்ணா அவர்கள் மனவலிமையால் உணர்வார்கள்! அதுபோல கழக ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி அறிஞர் அண்ணா அவர்கள் நம்மையெல்லாம் வாழ்த்திக்கொண்டிருப்பார்கள்! அதை நாம் நம் மனவலிமையால் உணர்கிறோம்!

திராவிடத்தின் தூண்டாமணி விளக்கும், தி. மு. கழகத்தின் ஒப்பற்ற வழிகாட்டியும், இலட்சக்கணக்கான தம்பிமார்களின் ஒரே அண்ணனும் ஆன அறிஞர் அண்ணா அவர்கள் பல்லாண்டு வாழ்க! பல்லாண்டு பல்லாண்டு வாழ்க!! அவர் கட்டிக் காத்து வளர்த்து வரும் தி. மு. கழகம் பல்லாயிரத்தாண்டு, பல கோடி நூறுயிரம் ஆண்டு வாழ்க!!! என மனமார வாயார வாழ்த்துகிறேன்!

**இரா. நெடுஞ்செழியன்**

# முரசே வாழ்!

புலவர் ஏ.கே.வேலன்

Censored
Passed
Asst. Jailor
Superintendent,
Central Jail, Tiruchirapalli

ஒலிக்கின்ற முரசே வாழி!

அன்று எம்மன்னவர் கோட்டத்தில் உனக்கென்று காவல்மனையும், ஆங்கே கட்டிலும் உண்டு. அவர் முடியுடை மூவேந்தராயினும் 'முரசுமுழங்கு தானை மூவர்' என உன்னை முன்வைத்துத் தன்னைச் சிறப்பித்துக் கொண்டனர்.

மன்னு மங்கலமாயினும் மன்னவர் நாளோலக்கமாயினும் யானைஎருத்தத்து (பிடரியில்) உன்னையமர்த்தி நீ முன் பேச வள்ளுவன் பின் பேசுவான். மணவிழாவிற்கும் மங்கையர்தம் பூங்கரத்தால் மெல்ல எறிந்து இசையோடு முரசு கொட்டி உலகுக்கு அறிவிப்பர். போரென்றால் உனக்கே முதலிடம்! முர



சதிர்ந்த பின்னரே வாளதிரும்! மாவீரர் தோளதிரும் - வெற்றி என்றால் திக்கெட்டும் கேட்க முரசு கொட்டுவர்.

இன்னவாறு எம் முன்னவர் வாழ்வில் இரண்டறக் கலந்திருந்தாய். இடைக்காலத்தில் நீ எங்கோ கோவில் மூலைகளில் வெளவால் மண்டபங்களில் செயலற்று ஓசைவளங்குன்றி கிடந்தனை! மீண்டும் உனக்குப் புதுமுறுக்கு! வாழ்விழந்த சமுதாயம் வாழத் துடிக்கின்ற புது உணர்வைக் கொட்டி முழக்கி விண்ணதிரச் செய்யும் பொன்னாள் வருகின்றது; வந்துவிட்டது! அதுதான் செப்டம்பர் 17; எங்கள் இயக்கம் பிறந்த நன்னாள். செப்டம்பர் 15; அந்த இயக்கத்தின் முதல்வன் - எங்கள் அண்ணன் பிறந்த திருநாள்!! வளரும் விடுதலை இயக்கங்களை குழவிப் பருவத்தில் ஏந்தி

(15-ம் பக்கம் பார்க்கவும்)



# கோட்டம் காப்போன்

பேராசிரியர் **அன்பழகன்**. எம்.எல்.சி.

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாள் வருவது எண்ணி மகிழ்கிறேன். பெருவிழா சிறக்க, வெற்றி முரசொலிக்க வாழ்த்துகிறேன்.

தூங்கிக் கிடந்த திராவிடம், வாழ்விழந்து தாழ்ந்துகிடந்த தமிழகம்—விழிப்புற்று எழுந்து நடந்திட, புத்துணர்வு கொண்டு புத்துலகு நோக்கிட, வழிவகுத்து முன்னின்று நடத்தும் மாமேதை வாழ்க பல்லாண்டு என வாழ்த்துகின்றேன்.

அவருக்கோ ஆயிரமாயிரம் தம்பியர். பன்னீராயிரம் படை வீரர்கள். தமிழ் பயின்ற நாவிலும், கேட்ட செவியிலும் புகுந்த நெஞ்சிலும் அவர் வாழ்கின்றார். நமக்கோ—ஒரே ஒரு அண்ணன். ஒப்பற்ற தானைத்தலைவன், திராவிடத்தின் இளஞாயிறு அவர். அவர் வாழ்விலே— செயலிலே— மூச்சிலே — திராவிடமே இருக்கிறது. வாழ்க அண்ணா என்று வாழ்த்துவதிலே எத்தனை இன்பம்! பெருமிதம்! பூரிப்பு நமக்கெல்லாம்!

திராவிட உரிமை வித்து இன்று இந்த மண்ணிலே முளைத்து, கிளைத்து தழைத்திடும் நிலை. எங்கே வளர்ந்து பூத்துக்காய்த்துக் கனிந்துவிடுமோ என்ற கவலை ஆளவந்தார்க்கு. முளையிலேயே கிள்ளத் தவறினோமே என்றஏக்கம்! வெட்ட வெட்டத் துளிர்க்கும் வகையாமே இந்த உரிமைப் பயிர் என்ற செய்தி கேட்டுப் பெருமூச்சு! அந்தோ பரிதாபம்! எங்கெங்கு காணினும் அந்த உரிமை முளையில் அதன் தளைத்திட்ட பசுமையே தெரிகிறது! எழுஞாயிறு விடும் ஒளிக்கதிர் அந்தப் பசுமையைப் பன்மடங்காக்கிக்காட்டுகிறது, அரசியல் ஆந்தைகளின் கண்கள் கூசுகின்றன. பதவிப் பூனைகளுக்கும், அதிகார வெறியில் தலைகீழாகத் தொங்கும் வெளவால்கட்கும் ஒரு மயக்க நிலை.

அந்தப் பசும் பயிர் தழைத்துள்ள தி. மு. க. தோட்டமோ கடமை என்னும் நீர்பாய்ச்சி, கண்ணியம்என்னும் எருவிட்டு கட்டுப்பாடு என்னும் வேலியமைத்து அமைக்கப்பட்டது. அந்தத் தோட்டக்காரனும் அவன் துணைவர்களும் இன்று தோட்டத்தில் இல்லை, சிறைக் கோட்டத்தில் உள்ளனர்.

பொது மக்கள் அந்தத் தோட்டத்தைக் காண்கின்றனர். மகிழ்கின்றனர். மறுகணம் அதைப் பொசுக்கி அழித்திட சிலர் சுற்றி வட்டமிடும் வஞ்சத்தையும் காண்கின்றனர். கவல்கின்றனர். மதுவுண்ட மந்தி கையில் பூமாலை என்னும்படி, அந்தநிலை இருப்பதை உணர்கின்றனர்.

செப்டம்பர் 15-ல் பிறந்தவர் பொறுப்பில் செப்டம்பர் 17-ல் பிறந்த தி. மு. க. என்னும் இத்தோட்டம் கண்கவரும் சோலையாகியுள்ளது. அரசாங்கத்தின் அடக்கு முறை கொடுமையென்னும் புயலுக்கெல்லாம் ஈடுகொடுத்து நிற்கின்றது. தடையென்னும் தீ மூட்டிடவே கூட ஆளவந்தார் சூழ்ச்சி செய்து வருகின்றனர். பசுங்கொல்லையைப் பாழுந் தீ கூட அழித்திட முடியாது. தீயும் புகையாகப் போக நேரிடும்; அழிக்க முனைந்த பழிமட்டும் ஆளவந்தாரை விடாது.

ஆனால்,நம்தோட்டக்காரனோ பட்டமரத்தைத் துளிர்க்கச் செய்யும் திறன் மிக்கோன். பாழ்நிலத்தைப் பசுமை கொழிக்கச் செய்யும் உழைப்பு மிக்கோன். களர் நிலத்தையும் கள்ளிக்காட்டையும் கனி குலுங்கும் விளை நிலமாக்கும் தியாகம் மிக்கோன். உண்மை, உழைப்பு, உறுதி, ஊக்கம், உயர் நோக்கம் உடையோன் காவலில் உள்ளது இத்தோட்டம். ஆளவந்தாரின் அடக்குமுறை கொடுமைகளைத் தாங்கிடவும் அதற்கு ஆற்றல் உண்டு.

உரிமைப் பயிர் வளர்த்திடும் விடுதலைத் தோட்டத் தலைவன் கெடுதலைப்போக்கிட வந்தவன்.

திராவிடத்தின் ஏந்தல் வாழ்க! என்று அலைகடலென முழங்கும் என்தோழர்களோடு நானும் ஒருவனாகிறேன்!

வாழ்க அண்ணா!

வெல்க திராவிடம்!



# சிறைக்குள் தென்றல்

இரா. செழியன். எம். பி.

செப்டம்பர் 15, செப்டம்பர் 17—அண்ணன் பிறந்த பொன்னாள்! கழகம் அமைந்த நன்னாள்! அரசியலில்—அறிவுலகில் எண்ணத்தில்—எழுத்தில்—நம்மையும், நாட்டையும் ஆக்கமுறச் செய்த அண்ணனுக்கு நமது வாழ்த்துக்களை அளிக்கிறோம்; வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்; வேலூரிலும், சென்னையிலும், திருச்சியிலும், மதுரையிலும், கோவையிலும், சேலத்திலும், தமிழகத்தின் பற்பல சிறைக்கூடங்களில் உள்ள கழகத் தோழர்களுடன் இந்த நன்னாளில் நமது மகிழ்ச்சியையும் என்றும் மாறாத தோழமையையும் பரிமாறிக் கொள்கிறோம். வெளியிலுள்ள தோழர்களுக்கு — "கம்பிகளுக்குப் பின்னிருக்கும் எங்களை வெளியிலுள்ளவர்கள் பார்த்தால், நாங்கள் சிறைப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்; அதே சிறைக் கம்பிகளின் பின்னிருந்து, வெளியிலுள்ளவர்களை நாங்கள் பார்த்தால், அவர்கள் பெரும் சிறையிலிருப்பதாகத் தெரிகிறது—அத்தகையப் பெரும் "வெளிச் சிறை"யிலிருக்கும் தோழர்களுக்கு எங்களது அன்புவாழ்த்துக்கள்.

அனைவருக்கும்—ஏன் நம்மை நமக்கு மாற்றார் என நினைத்து மனதை அலைக்கழித்துக் கொண்டிருப்பவர்களுக்குக்கூட இந்த மங்கள நன்னாளில் நமது மகிழ்ச்சி நிறை வாழ்த்துக்கள்!

வைகறைத் துயிலெழும் நேரம்! இருள் கலைந்து மங்கிய ஒளி பரவும் காலை! சிறைக் கம்பிகளிடையே விழும் மின் விளக்கின் ஒளியில் இதனை எழுதுகிறேன்! ஒளியைச் சிறை கம்பிகள் தடுத்துவிடுவதில்லை! ஆங்காங்கே நிழல்களை உண்டாக்கினாலும், கம்பிகளைத் தாண்டி ஒளி வரத்தான் செய்கிறது! சிறைக்குள்ளும் தென்றல் வீசுகிறது! அதனுடன் கலந்து தென்பாங்கு இசையும் தவழ்ந்து வருகிறது! காலையெழும் கதிரவனின் பொன்னிறக் கதிர்கள், உயர்ந்த கற்சுவர்களைத் தாண்டி வரத்தான் செய்கிறான்! உதய ஒளியைத் தடுப்பாரில்லை! இதயகீதத்தை நிறுத்துவாரில்லை! பிறந்தநாளை வாழ்த்துகிறோம்; பிறந்த பொன்னாட்டை வணங்குகிறோம்!

அன்பன்,

**இரா. செழியன்**






திருச்சி சிறை அதிகாரியின் முத்திரை இது.

# தென்னகமே! நீ வாழ அவரை வாழ்த்து.

டி.கே. தாமரைச்செல்வன்

அன்று சிறை முழுவதும் ஒரே பரபரப்பு. காய்ந்து கட்டியான சோற்றுப்பட்டையும், எறிந்தால் பந்தாகத் துள்ளும் களித்துண்டும், எட்ட இருக்கும் போதே குடலை வெளியே பிடித்து இழுக்கும் இரும்பு வாடை வீசும் குழம்பும், அதில் மிதந்து கொண்டிருக்கும் கீரைத்தண்டு முள்ளங்கித் துண்டுகளும், தின்பதற்கு எவராவது வரமாட்டார்களா என்று தேடிக் காத்திருந்தன. எவருமே அவற்றைத் திரும்பிக் கூட பார்க்கவில்லை. அவர்களுக்குப் பசி ஏற்படவில்லை என்பதல்ல; காலையில் கொடுத்த கஞ்சி, குடித்த கால்மணி நேரத்திலேயே காணாமல் போய்விடும். பிறகு நாலைந்து மணி நேரங்கள் வரை வயிறு காய்ந்து கொண்டிருக்கும். குடல் தன்னையே ஜீரணித்து உடலுக்கு உதவலாமா—என்ற முயற்சியில் ஈடுபடும் நேரத்தில் வட்டமான பட்டைச்சோறு தன் படை வரிசையோடு வருகை தரும். எப்படியிருந்தாலும் சரி என்று மூக்கையும் நாக்கையும் கட்டுப்படுத்திக்கொண்டு உள்ளே திணிப்பார்கள், அவைகளை எல்லோருக்கும்! ஆனால் அன்று அதுவும் நடக்கவில்லை.

அந்தக் கட்டாந்தரை முழுவதும் கருகிப் போன உடல்களாகவே மண்டிக் கிடந்தன. ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்று எதிர்பார்த்து அப்படி நடந்து விட்டால் என்ன ஆகிவிடுமோ என்ற அச்சத்தால் தவித்தனர்; அத்தனை பேரும்!

அப்போது வந்தார் ஒரு அதிகாரி. அமர்ந்திருந்த அனைவரையும் பார்த்தார்.

“இப்போது நீங்கள் எழுதிக் கொடுத்தால் உடனே ஊர் சேரலாம்.”

அதிகாரி சொல்லி முடித்த அரை வினாடி நேரத்தில் சூழ்ந்திருந்த தோழர்களின் உள்ளங்கள் நிலைகுலைந்து தவித்தன. அங்கே அமர்ந்திருந்தவர்கள் அன்றாடம் அனுபவிக்கும் அவதி, அங்குள்ளோர் அனைவருக்குமே தெரியும். இருநூறு மைல்களுக்கு அப்பால் உள்ள அவர்கள் இல்லங்களும், அவற்றிலிருந்து இவர்களை ஆவலோடு எதிர் நோக்கிக் காத்திருக்கும் உள்ளங்களும், இரவு பகலாக அவர்களின் இதயங்களில் நிழலாடி உருவாகி நிம்மதியைச் சிதைத்துச் சின்னாபின்னப்படுத்திக் கொண்டிருக்கும் நிலைமைக்கு ஆளானவர்கள். வந்து பார்க்கக்கூட வசதியற்றவர்களை உற்றாராகவும், பெற்றோராகவும் கொண்டவர்கள். உள்ளே அவர்கள் வந்த நேரம்—அந்த வட்டாரத்தில் வரவு என்று மதிக்கும் அளவுக்குப் பணம் கிடைக்கும் ஒரே வாய்ப்பு. சிறு அளவு சலனம் கூட அவர்கள் சிந்தனையைக் கவிழ்த்துவிடும். அப்படி ஏதாவது நேர்ந்துவிட்டால்...? அந்த நினைப்பே நெருப்பாகி அனைவருடைய நெஞ்சுகளையும் எரிக்கத் தொடங்கியது.

ஒரு தோழர் எழுந்தார்! அதிகாரி அவர் பக்கம் திரும்பினார். ‘என்ன சொல்கிறீர்கள்?’- அதிகார பீடத்திலிருந்து அன்பு வெளிப்படும்போது அது எப்படி ஒலிக்கும் என்பதை அவருடைய குரல் எடுத்துக் காட்டிற்று.

“இங்கேயுள்ள எவருமே அதற்குத் தயாராக இல்லை”

அமைதியான குரலில் உறுதியாகப் பேசினார்.

எழுந்த கையொலிகள் சூழ்ந்திருந்த அவர்களை எல்லாம் அதிரச் செய்தன. சிரிப்பலைகள் சிதறின! அவரை ஆளுக்கொருவராகத் தூக்கி எடுத்துக் கொண்டு ஆட்டம் போடத் துவங்கினர், அங்கிருந்தோர் அனைவருமே!

கட்டாந்தரை கூட களிப்பை உருவாக்கும் கோட்டமாகக் கூடும் என்பதை எடுத்துக் காட்டிற்று அந்தக் காட்சி. தன்னை அனுப்பி வைத்தவர்களால் ஏற்பட்ட அவமானத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தலை குனிந்து தளர் நடையோடு திரும்பினர் அந்த அதிகாரி.

ஒரே ஒரு கையெழுத்து என்று ஒவ்வொரு நாளும் அலைகின்றனர். அரசாங்கத்துக்கு மனு அனுப்புவோர் கையெழுத்து வாங்க அலைவதைப் பார்த்திருக்கிறோம். சிறைக்குள் அரசாங்கமே கையெழுத்துக்கு அலைகிறது. சோற்றில் கல்லிருக்கிறது என்றால் - வீட்டுக்குப் போனால் நல்ல விருந்தே கிடைக்கும் என்ற உண்மையைக் கூறுகிறார்கள். மருத்துவமனையில் கொடுக்கப்படும் மருந்து நோய் தீர்க்கவில்லையே என்று கூறினால்...! ஊரில் இருக்கும் மருந்துக் கடைகளில் உன்னதமான மருந்துகள் கிடைக்கும்! உடனடியாக நோயும் குணமாகும் என்று உபதேசம் செய்யப்படுகிறது.

இதற்குக் காரணம் யார்? "உள்ளே அடைத்து விட்டோம். இனி அழிந்தே போவார்கள்"—என்று ஊர் ஊராகக் கூச்சல் போடுகிறார்களே அவர்கள் தாம். "கட்டோடு அழித்து விட்டோம்—இனி எப்படி சடைத் தேற முடியும்?" என்று கேட்டவர். மறியல் தொண்டர்களை கைது செய்தவுடன் குற்றப் பத்திரிகை தயாரிக்க வழியில்லாமல் ஏதோ சதிக் குற்றத்துக்குச் சாட்சியம் தேடுவது போல பதினைந்து நாட்கள் வாய்தா கேட்டுக் காவல் கைதிகளாக அடைத்து வைத்தார்கள். வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முன்பே, தீர்ப்பு கடுமையாக இருக்கவேண்டும் என்று பொறுப்புள்ள அமைச்சர்களே நிர்வாக உணர்வு துளிகூட இல்லாமல் தினந்தினம் புலம்பிக் கொண்டிருந்தார்கள். 'ஆறு மாதங்கள் கடுங்காவல்' என்ற தண்டனையைக் கொட்டை எழுத்துக்களில் செய்தித் தாள்களில் வெளியிட்டு அச்சுறுத்துவதில் முனைந்தனர். "கட்டுப்படுத்தி விட்டோம்; அடக்கி ஒடுக்கி விட்டோம்."—என்று ஊரார் முன் வீராப்பு பேசிவிட்டு சிறைக்குள் தினந்தினம் சேவடி தொழுகின்றனர். கையெழுத்து வேட்டை ஆடுகின்றனர்.

சிறைக்குள் சிக்கியவர்கள் தினந்தினம் அனுபவிக்கும் அவதி.........கொட்டடியைத் திறந்து விடுகிற நேரத்தில் அவர்களுடைய உறக்கம் கலைந்தாக வேண்டும்; இருக்கிற தண்ணீரை எடுத்து உடம்பெல்லாம் பூசிக் கொண்டு தங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்; உள்ளே அடைத்தவுடன் உறக்கம் வந்தாக வேண்டும்; எவரும் இயங்கவில்லை; இயக்கப்படுகிறார்கள்.

"நாங்கள் வேலை செய்யத் தான் வேண்டுமோ?" என்று கேட்டால் இங்கே இருக்கும் அதிகாரிகள் "நீங்கள் கிரிமினல் கைதிகள். வேலை கொடுத்துத்தான் ஆகவேண்டும்."

ஏற்கனவே இங்கிருக்கும் கைதிகள்—கொலை செய்தார்கள் கொள்ளை அடித்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு உள்ளே அனுப்பப் பட்டவர்கள், "நாங்களும் மன்னிப்பு எழுதிக் கொடுக்கிறோம். எங்களையும் வெளியே அனுப்புங்கள்" என்று கேட்டால், "அவர்கள் அரசியல் கைதிகள்; அந்த சலுகை அவர்களுக்கு மட்டு 'தான் உண்டு"—என்கிறார்கள்.

வேலை செய்யச் சொல்லும் போது கிரிமினல் கைதி!;

வெளியே போகலாம் என்று சொல்லும்போது அரசியல் கைதி!

இந்தச் சூழ்நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றனர் எண்ணற்ற தொண்டர்கள். சோறு போதாமல் ஒட்டிக் கொண்டிருக்கும் வயிறுகள்—சுகங்காண முடியாமல் கொளுத்திக் கொண்டிருக்கும் வெய்யிலில் வேலை செய்து இளைத்து கருகிப்போன உடல்கள்—இந்த நிலையிலே மன்னிப்பு என்ற வேண்டுகோள் அவர்களை மயக்கம் சூழ்ந்து சுழலுகிறது.

"தூர விலகி நில் பகையே—துள்ளி வருகுது வேல்!"-என்று சிந்து பாடுகிறார்கள். சிந்தை மாறாச் செம்மல்கள், ஆம்! வேல் ஊரில்தான் 'அவர்' இருக்கிறார். இயற்கையாகவே அமைந்த கனிவும், தொண்டர்கள் ஏற்கும் தொல்லைகளை எண்ணி ஏற்பட்ட கலக்கமும் இணைந்த இருகண்கள் எங்கோ வெகு தொலைவிலிருந்து அவர்களைக் கண்காணித்துக்கொண்டிருக்கின்றன. புன்னகையும் மென்குணமும் ஒன்றுபட்ட அந்த உருவம், அவர்களுக்கு உற்சாக மூட்டி, 'மன்னிப்பு மோகினி'யின் மயக்கத்துக்கு ஆளாகிப் பலியாகாமல் தடுக்கிறது!

செப்டம்பர் பதினைந்து—அவர் பிறந்த நாள்! பதினேழு—அவரால் வளர்க்கப்பட்ட உணர்வு தனக்கொரு நிலைக்களம் தேடிக்கொண்ட நாள்! 'பெற்றவள் முந்தி!, பிறப்பது பிந்தி' என்ற இயற்கை அமைப்பையே இடைவேளையாக அமைந்த இரண்டு நாட்களும் எடுத்துக் காட்டுகின்றன.

'அவர் என்ன அப்படிப்பட்ட

புதுமைகளைச் செய்து விட்டார்?'—என்று கேட்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் —நாடு புதுமைகளைத் தேடுகிற காலம் தென்னகத்தில் அண்மையில்தான் உண்டானது. எந்தத்துறையில் மாறுதல் காணவிரும்பினாலும், ஏற்கனவே இருப்பதை ஏற்றுக்கொண்டவர்கள் எதிர்ப்பு ஏற்படத்தான் செய்யும். நாம் எல்லாத்துறைகளிலும்புதுமை காண விரும்பினோம். எதிர்ப்பவர்கள் எண்ணிக்கையும், ஏராளமாக வளர்ந்தது. எதிர்நீச்சல் போடுபவர்கள் என்று பெருமை பேசினோமே தவிர, நம் வலிவை வளர்த்துக் கொள்ள நினைக்கவில்லை.

அவர் நம்மிடையே வந்தார்' எதிர்ப்பைக் குறைத்தார். ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று கூறியவர்களையே எடுத்துக் கொள்ளச் செய்தார். நண்பர்கள் பெருகினர்; நல்லவர்கள் உணர்ந்தனர்; நாட்டு மக்கள் நம்மைக் கவனிக்கத் தொடங்கினர். வரலாற்றின் அடிப்படையில் கொள்கையை உருவாக்கினார். முற்றாத இளப் உள்ளங்களால் கோட்டை கட்டினார்; முதுமையடையாத மூளைகளைக் கொண்டு திட்டம் தீட்டினார்; இவை மூன்றும் இணைக்கப்பட்டால்அவற்றைத் தவிர்க்கவோ தகர்க்கவோ முடியாதென்பதைச் செய்து காட்டினார்; ஏதோஒரு தடைக்கல், எடுத்தெறிந்தால் எங்கோ போய் விழுந்துவிடும் என்று எண்ணியவர்கள் எல்லாம் உயரம் காணமுடியாத சிகரமாக அது உருவம் பெற்றிருப்பதை இன்று பார்க்கிறார்கள். அவரை அசைத்துவிடலாம் என்ற எண்ணத்தால், பொது வாழ்வில் சில பூப்பிலிகளும் பூ விழந்தவர்களும் ஒன்று கூடிப் பொழுதை வீணாக்குகிறார்களே தவிர, உருவான விளைவை காணவே போவதில்லை.

வரலாறு பல தலைவர்களைச் சந்தித்திருக்கிறது. இன்று தான் நம் தலைவர் அண்ணாவைப் பார்க்கிறது.

“நான் ஒரு தலைவன்” என்று கூறியவர்கள் ஏராளம். ‘நீ என் தம்பி’ என்றழைத்தவர் இவர் ஒருவர்தான்.

“வாருங்கள், குறிக்கோளை நோக்கி அழைத்துச் செல்கிறேன்” என்று வந்தவர்களை அழைத்துக்கொண்டு, வராதவர்களை விட்டுவிட்டு நடந்த தலைவர்கள் பலருண்டு.

“இருந்து எல்லோரையும் அழைத்துச் செல்வேனே தவிர, தன்னந்தனியே நான் மட்டும் கிடைத்த சிலரோடு போகமாட்டேன்” என்று சொன்ன தலைவர் இவர் மட்டும்தான்.

“நான் சொன்னதை நீ கேட்டு நட” என்று கட்டளையிட்ட தலைவர்கள் இருந்திருக்கிறார்கள், “நீங்கள் முடிவெடுத்ததை நான் நிறைவேற்றித் தருகிறேன்” என்று நடக்கும் தலைவர் அண்ணா ஒருவர்தான்.

“இப்படிப்பட்ட பண்புகள் ஒருவரைத் தலைவராக ஆக்குமா?” என்ற ஐயப்பாடு எவருக்காவது ஏற்பட்டால், பறந்தோடிப்போன பதிமூன்று ஆண்டுகளையும் வரலாற்றின் பரிசிலனைக்கு முன்வைக்கிறது திராவிட முன்னேற்றக்கழகம். பிறகு தன் பதினான்காம் ஆண்டைத் தொடங்குகிறது. தென்னகத்தின் நல்வாழ்வுக்காக உழைக்கும் முரசுகள் அத்தனையையும் இந் நன்னாளில் வாழ்த்துகிறேன்.

அவர்! நமக்கு வழி காட்டினார்—விழி கொடுத்தார்—ஒளியூட்டினார் — உடனிருந்து அழைத்தும் செல்லுகிறார்! அவரை வாழ்த்த எனக்கு வயதோ அறிவோ போதாது. தென்னகமே! நீ வாழ அவரை வாழ்த்து!

## இரட்டிப்பு மகிழ்ச்சி!

**“நாட்டுப் பிரிவினை உணர்ச்சியைத் தூண்டினாலும், பேதம் ஊட்டக்கூடிய வகையில் பேசினாலும், நீண்டகாலம் தண்டிக்கும்படி சட்டம் வரலாம் என்ற செய்தி படித்தேன். நான் மந்திரி சபை அமைக்கும்படியான நிலை ஏற்பட்டால் ஏற்படும் மகிழ்ச்சியைவிட இரட்டிப்பு மகிழ்ச்சியை நான் பெற்றேன்.”**

*[10-9-62 சைதைக் கூட்டத்தில்]*

- அறிஞர் அண்ணா



# காஞ்சிபுரத்து நேருவும்

அறிஞர் அண்ணு அவர்கள் பண்டிதரைப் போல பதினைந்து வயதிலேயே இங்கிலாந்து சென்று அப்போதைய பரோடா மன்னரின் மகனோடும், கபூர்தாலா மகாராஜாவின் மகனோடும் ஹாரோவில் பள்ளிப் படிப்பையும், கேம்பிரிட்ஜிலே கல்லூரிப் படிப்பையும் கற்றவர் அல்ல.

பொடிக் கறை மாருத உடுப்பு அணிந்திருக்கும் அண்ணுவுக்கு, தினந்தினம் சலவை பாரிசிலிருந்து வருகிறது என்று பண்டிதரைப் பற்றி எழும் வதந்திபோல் கிடையாது.

பண்டிதருக்கு உள்ளதுபோல் லேடி மவுண்ட் பேட்டன் போன்ற சீமாட்டிகளின் நட்பு அண்ணுவுக்குக் கிடையாது.

ஆனுல், பண்டித நேரு அவை களிலெல்லாம் பெருமை அடைவதில்லை.

"விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு இந்தியாவுக்கு சேவை செய்வது பெருமையாகும்."

—என்றுதான் அவர் கூறுகிருர்!

ஆம்; பண்டித நேரு, தான் ஒரு விடுதலைப் போராட்ட வீரன் என்பதிலே மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிருர். அறிஞர் அண்ணுவும் அப்படித் தான்!

ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எப்போதும், எல்லோருக்கும் கிடைக்காது.

ஏனெனில் விடுதலைப் போராட்டம் என்பது சரித்திரத்தின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் மட்டுமே நடப்பதாகும்.

ஒரு தலைமுறையினர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, அதில் வெற்றி பெற்று விட்டால், அந்தத் தலைமுறைக்குப் பின்னுல் வரும் சந்ததி யாருக்கு அந்த அரும்பெரும் வாய்ப்பு கிடைக்காது.

பண்டித நேரு அந்த வாய்ப்பு கிடைத்தமைக்கு மட்டுமா பெருமை யடைகிருர்?

"மகாத்மா காந்தி போன்ற தலைவருக்குக் கீழே (இந்தியாவுக்கு) சேவை செய்வது இரட்டிப்பு அதிர்ஷ்டமுடையதாகும்."

—இதில்தான் அண்ணுவும் நேருவும் வேறுபடுகிருர்கள்.

ஏனெனில் அறிஞர் அண்ணு அவர்கள் தனது தலைமையில் பணியாற்றக் கூடிய 'அதிர்ஷ்டத்தை' லட்சோப லட்சம் விடுதலை வீரர்களுக்கு அளித்த மகாத்மா காந்தியாவார்! ஆனுல் நேரு நேருதானே தவிர அவர் காந்தியாக மாட்டார்!

இருந்தாலும் அண்ணுவைக் காஞ்சிபுரம் நேருவென்றும் நேருவை அலகாபாத் அண்ணுவென்றும் அழைக்கும் அளவு ஒற்றுமையொன்று உண்டு.

1922-ம் ஆண்டு மே மாதம் 11-ம் தேதியன்று லக்னே சிறையிலிருந்த தன் தந்தையைப் பார்த்துவிட்டு, பண்டிதர் திரும்பும்போது சிறைவாயிலிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

பிறகு அவர் 'இந்தியன் பினல் கோட்' 506, 385, 117, 116 ஆகிய பிரிவுகளின்படி குற்றம் சாட்டப்பட்டு. அலகாபாத் மாவட்ட நீதிபதியின் முன்னுல் விசாரிக்கப்பட்டார்,

# அலகாபாத் அண்ணாவும்

## மாறன் எம்.ஏ

மே 15-ம் நாள் அன்று நீதிபதி அரசு தரப்பு சாட்சியங்களை விசாரித்துவிட்டுக் கீழ்க் கண்டவாறு கூறினர்'

"அலகாபாத் மாவட்ட நீதிபதியான கே. என். நாக்ஸ் ஆகிய நான், ஜவகர்லால் நேருவாகிய உம்மை கீழ்க்கண்டவாறு குற்றம்சாட்டுகிறேன் !

(1) 1922, ஏப்ரல், 22-ந் தேதியன்றே, அல்லது அந்த நேரத்திலோ, ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது அலகாபாத்தில் உள்ள அன்னியத் துணி விற்கும் வியாபாரிகளை, அன்னியத் துணியை இறக்குமதி செய்வதென்ற சட்டப்படி தாங்கள் செய்யக்கூடிய காரியத்தை மேற்கொண்டு அவர்கள் செய்தால், அவர்கள் கடைகளின் முன்னல் மறியல்செய்து அவர்கள் வியாபாரத்தைக் குலைப்பேன் என்று மிரட்டியதன் மூலம் பயமுறுத்திச் சம்மதிக்க வைக்க முயன்ற குற்றத்தைச் செய்து அதனல் ஐ. பி. சி. 506-வது பிரிவின்கீழ் குற்றம் செய்திருக்கிறீர்.

(2) சுமார் 3,000 பேர் கூடியிருந்த அதே பொதுக் கூட்டத்தில் பேசும்போது மேற்சொன்ன பயமுறுத்திச் சம்மதிக்க வைக்கும் குற்றத்தை செம்மையாகச் செய்ய மறியலில் ஒத்துழைக்கும்படி பொது மக்களை அழைத்து, ஐ. பி. சி. 117 பிரிவின் கீழும், 506 பிரிவின் கீழும் தூண்டிவிடும் குற்றத்தைச் செய்திருக்கிறீர்.

'(3) நகர காங்கிரஸ் கமிட்டி என்கிற அமைப்பில் நீர் அங்கத்தினராக இருந்து, 1922 ஏப்ரல் 26-ம் தேதியிலிருந்து, மே 3-ம் தேதி வரை சில துணி வியாபாரிகளின் முன்னல் மறியல் செய்யவேண்டும் என்கிற முடிவு உமது தலைமையில் கூடிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு, அதன் மூலம் சம்பந்தப்பட்ட அந்தத் துணிக் கடைக்காரர்களைக் காயமேற்படும் பயத்தில் ஆழ்த்தி, அதன் மூலம் பலவந்தப்படுத்திப் பணம் பறிக்கும் காரியத்தை நகர காங்கிரஸ் கட்சி செயலாளரான கேசவ தேவ் மாளவியா செய்வதற்கு, வேண்டுமென்றே உதவிசெய்து ஐ. பி. சி. 116, 885 ஆகிய பிரிவுகளின்படி குற்றம் செய்திருக்கிறீர்."

மே 17-ம் தேதி யன்று பண்டித நேரு கோர்ட்டார் முன்னிலையில் ஒரு அறிக்கையைப் படித்தார்:

அதன் முக்கிய பகுதிகள் கீழ் வருமாறு ;

"அரசியல் குற்றங்களைப் பொருத்தவரையில் இந்தியாவில் உள்ள நீதிமன்றங்கள் அரசாங்கத்தின் உத்தரவைத் தான் பதிவு செய்கின்றன. நான் இப்படிச் சொல்வதால் நீதிபதி அவர்களுக்கு அகௌரவம் ஏற்பட வேண்டுமென்று விரும்பவில்லை. இந்தியாவைத் தவறான வழிகளில் ஆண்டு வரும் ஒரு அரசாங்கத்திற்கு முட்டுக் கொடுக்கும் பணிக்கு நீதிமன்றங்கள் முன்பு எப்போதையும்விட இன்று அதிகமாக உபயோகப்படுத்தப்படுகின்றன. அதனல் அதன் கௌரவம் போய்விட்டது......

"பலவந்தப்படுத்தியதாகவும், பயமுறுத்தி சொத்தை அபகரிக்க முயன்றதாகவும் நான் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறேன். இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையைக் குறிக்கின்றவை என்று நான் ஆச்சரியப் படுகிறேன். என்மீது சுமத்தப்பட்ட சட்டப் பிரிவுகளுக்கும் உண்மைக்கும் தொடர்பில்லை.



இதை அரசுத் தரப்பு சாட்சியமே வெளிப்படுத்தியிருக்கிறது. அலகாபாத்தில் நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றி ஏதாவது மறியல் செய்தோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தூண்டியிருப்பதாகவே நான் கருதுகிறேன். சட்ட ரீதியான நோக்கத்தை நிறைவேற்ற அமைதியான மறியல் செய்வது குற்றம் என்றால் அப்படிப்பட்ட மறியல் நடத்த ஆலோசனை வழங்கியதும் உதவியதும் உண்மை என்பதை ஒப்புக்கொள்கிறேன். பிரிட்டிஷ் இந்தியாவின் சட்டத்தின்படி கூட அமைதியான மறியல் குற்றமாகியிருப்பது எனக்குத் தெரியாத விஷயமாகும். துணி வியாபாரிகள் தாங்கள் கூட்டாகச் செய்த ஒப்பந்தத்தின்படி நடக்கவேண்டும் என்பதுதான் எங்கள் மறியலின்நோக்கமாகும். பலவந்தத்தின் மூலமும் பலாத்காரத்தின் மூலமும் இதில் எங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று யாராவது நம்புகிறீர்களா? மக்களுடைய ஆதரவிலும், நாட்டோரின் நல்லெண்ணத்திலும் தான் எங்கள் பலம் இருக்கிறது என்பது உலக முழுவதும் தெரியும். பழைய காலத்து ஆயுதங்களான. பலவந்தமும், வன்முறையும் அல்ல எங்கள் ஆயுதங்கள். எங்கள் மகத்தான தலைவர் எங்கள் கையில் கொடுத்திருக்கும் ஆயுதங்கள் அன்பும், சுயதியாகமும்தான், நாங்களேகஷ்டங்களை ஏற்றுக்கொண்டு, எங்கள் கஷ்டத்தின் மூலம் எதிரியை மனமாற்றம் செய்ய முயற்சிக்கிறோம்.

“பலவந்தப்படுத்துதல் (கிரிமினல் இண்டிமிடேஷன்) என்பது ஒரு நபரையோ அல்லது அவர் சொத்தையோ காயப்படுத்துவதாகவோ அல்லது சேதப்படுத்துவதாகவோ மிரட்டுவதாகும். இதில் காயப்படுத்துவது என்பது சட்ட விரோதமாகத் துன்பம் இழைப்பதைக் குறிக்கும். பயமுறுத்தி சொத்தை அபகரிப்பது (எக்ஸ்டார்ஷன்) என்பது எந்த ஒரு நபரையாவது “காயமடையும்” பயத்திற்கு உள்ளாக்கி அதன் மூலம் வஞ்சகமாய் அவனிடமிருந்து சொத்தைக் கைப்பற்றுவதைக் குறிக்கும். இந்தப் புதுமையான குற்றச்சாட்டுகள் எந்த அடிப்படையில் என்மீது சுமத்தப்பட்டிருக்கின்றன என்பதை அறிய நான் அரசு தரப்பு சாட்சியத்தைக் கூர்ந்து கவனித்தேன். நான் யாரைக் காயப்படுத்துவதாக மிரட்டினேன்? யாருடைய சொத்தை அபகரிப்பதாக மிரட்டினேன்? நாங்கள் வஞ்சக முறையில் நடந்துகொண்டதாக எங்கே காட்டப்பட்டது? நாங்கள் யாரையும் காயப்படுத்தியதாகவோ, சொத்தை சேதப்படுத்தியதாகவோ, சட்ட விரோதமான முறையில் யாரையும் துன்பப்படுத்தியதாகவோ, வஞ்சகமாக நடந்து கொண்டதாகவோ எந்தவித குற்றச்சாட்டையும் நான் இதுவரை கேட்கவில்லை; அவை எதுவும் நிரூபிக்கப்படவும் இல்லை. போலீஸ், சி. ஐ. டி. உட்பட எந்த ஒரு அரசுத் தரப்பு சாட்சியும் அப்படி ஒரு குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. மறியலை நேரில் பார்த்த அலகாபாத்தில் உள்ள ஆயிரக்கணக்கானவர்களில், எங்களால் பலவந்தப்படுத்தப் பட்டவர்களோ அல்லது மறியல் செய்தவர்களால் வன்முறை வார்த்தைக்கு ஆளாக்கப்பட்டவர்களோ யாரும் கிடைக்கவில்லை போலிருக்கிறது. போலீசாலும், சி.ஐ.டி. யாலும் அப்படி எந்த ஒரு சாட்சியமும் கொண்டுவரப்படாததே எங்கள் வெற்றிக்கு வேறு எந்த அத்தாட்சியும் தேவையில்லை என்பதைக் காட்டுகிறது......

“பல மாதங்களாக மறியல், இந்தியா முழுவதும் நடைபெற்று வருகிறது. இந்த மாகாணத்தில் பல நகரங்களிலும், பல கடைத்தெருக்களிலும் நடந்திருக்கிறது. ஆனால் அவைகளுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தியாவிலும், இங்கிலாந்திலும் அமைதியான மறியல் குற்றமல்ல என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் என்ன செய்வது? அமைதியான மறியலைச் சட்ட விரோதமானது என்று ஒரு பேனா வரியால் செய்துவிடும் சக்தி அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் அப்படிச் செய்கிறார்களோ இல்லையோ; அதனால் நாங்கள் அதைவிட்டுவிட மாட்டோம்.

“மறியலுக்காக இந்த வழக்கு போடப்பட்டிருப்பது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய இந்த வழக்கு அன்னியத் துணி பகிஷ்காரப் பிரச்னையை மேலும் முன்னணிக்குக்கொண்டுவரும். அலகாபாத் மக்களும், இந்த மாநிலத்து மக்களும் இதன் முக்கியத்துவத்தை நன்றாக உணர்ந்து கொள்வார்கள்...... எனக்கு அளிக்கப்படும் சிறைக் கஷ்டத்தை நான் மிகவும் மகிழ்வோடு ஏற்பேன்—அதன் மூலம் நான் மக்களின் இதயங்களைத் தொட்டு, அவர்களை உன்னதக் காரணத்திற்காக வெற்றி கொள்ள முடியும் என்பதால்!

“நானும் மற்றவர்களும் பலாத்காரம் செய்ததாகவும், பலவந்தப் படுத்தியதாகவும். குற்றம் சாட்டப்பட்டிருக்கிறோம். போலீசாரும். அரசாங்க அதிகாரிகளும் தங்கள் மனசாட்சியை ஆராய்ந்து, தங்கள் இதயத்தின் அடித்தளத்தைத்தடவி, சென்ற ஒன்னரை ஆண்டுகாலமாக அவர்கள் என்ன செய்து வருகிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டுகிறேன். பலாத்காரம் செய்தல். பயங்கரவாதிகளாக மாறிச் செயல் புரிதல், லஞ்சம் வாங்குதல், பலவந்தப்படுத்

திப் பணம் பறித்தல்—இவை கள் மாகாணம் முழுதும் நடைபெறுகின்றன. அப்படிப் பட்ட குற்றத்தைச் செய்தவர் கள் காங்கிரஸ்காரர்களோ, தொண்டர்களோ அல்ல. ஆனால் அரசாங்கத்தின் எடு பிடிகள்! தங்கள் மேலதிகாரி களுக்குத் தெரியும்படியாயும், அவர்களது அனுமதி பெற்றும் அப்படிச் செய்கிறார்கள். ஆனால், அவர்கள் முதுகில் தட்டிக் கொடுக்கப்பட்டு, புகழப்பட்டு, உயர் பதவிக ளுக்கு அனுப்பப்படுகிறார்கள்..

"அன்பும் விசுவாசமும் இத யத்தில் பிறப்பவை. அவை களைச் சந்தையில் விலைக்கு வாங்க முடியாது. துப்பாக்கி முனையிலும் பெறமுடியாது. விசுவாசம் என்பது உன்னத மான பொருள். ஆனால் இந்தி யாவில் சில வார்த்தைகள் பொருள் இழந்துவிட்டன. விசு வாசம் என்பதற்கு தாய்நாட் டுத் துரோகம் என்பது பொரு ளாக இருக்கிறது. அன்னிய எஜமானனின் வால்பிடிப்ப வனே விசுவாசி என்று அழைக்கப்படுகிறான். இருந்தா லும் அந்த வார்த்தைக்கான பொருளை நாங்கள் மீட்டிருக்கி றோம். எந்த விளைவுகள் ஏற் பட்டாலும் எல்லாவற்றிற்கும் மேலாக தாய் நாட்டையே உயர்வாக மதிப்பவர்கள் இன்று இந்தியாவில் உள்ள ஒவ்வொரு சிறையிலும் இருக் கிறார்கள். அவர்களுக்கு அழைப்பு வந்துவிட்டது! அவர் கள் விடுதலையின் தோற்றத் தைப் பார்த்து விட்டார்கள். தங்கள் உள்ளம் விரும்பு வதைச் சாதிக்கும் வரை அவர் கள் அயரமாட்டார்கள்; பின் வாங்கமாட்டார்கள் ...

"இந்தியா விடுதலை பெறப் போகிறது. அதில் சிறிதளவும் சந்தேகமில்லை. சுதந்திர இந்தி யாவின் நட்பு இங்கிலாந்திற்கு வேண்டும் என்றால் இங்கி லாந்து இப்போதே மனம் வருந்தி, தனது பல பாவங் களைப் போக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இங்கே வருங்காலத்தில் இங்கி லாந்திற்கு மதிப்பு இருக்கும்.

"விருப்பத்தோடும், மகிழ் வோடும் நான் சிறை செல்லத் தயாராக இருக்கிறேன். எங்க ளதுபுனிதமான-அன்பான தலை வர் சிறை சென்ற பிறகு சிறை என்பது சொர்க்கம் போலவும் யாத்திரை போகவேண்டிய திருத்தலமாகவும் ஆகி விட் டது. பெரும் உள்ளம் படைத் தவரும், துணிவானவர்களுக்



## கழகமும் வன்முறையும்

**தி. மு. கழகத்திற்குப் பலாத்காரத் தில் நம்பிக்கை இல்லை. பெற வேண்டிய விடுதலையை நாணய மான வழியில், மிகுந்த அடக்க உணர்ச்சியோடு, அரசியல் பண் பாட்டு வழி, அறவழி நின்று, போராடியும் தர மறுத்தால் - அல்லது அந்த முயற்சி முறியடிக் கப்பட்டால் - மிச்சமிருக்கிற வழி நிச்சயம் உள்நாட்டு யுத்தம்தான்! ஆனால் அப்போது நான் இருக்க மாட்டேன்! தி. மு. கழகம் இராது!**

**அறிஞர் அண்ணா**

சென்னை அக். 26. 1961

குள்ளே மிகவும் துணிவானவரு மான சௌகத் அலியும், அவரது வீரமிக்க சகோதரரும் அங்கே இருக்கிருர்கள். இன்னும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அங்கே யிருக்கிருர்கள். உண்மையில் சிறைக்கு வெளியே இருப்பது தனிமையாக இருப்பது போல் தோன்றுகிறது.

“இந்தமுறை எனக்கு அதிகச் சிறைத்தண்டனை கிடைக்கலாம். அப்படி இருந்தாலும், இல்லா விட்டாலும், வெளியே வரும் போது இந்தியாவில் சுதந்திரத்தை வரவேற்று வாழ்த்துக் கூறத்தான் வருவேன் என்கிற நம்பிக்கையோடு உள்ளே செல்கிறேன்.

“பிரிட்டிஷ் அரசைப் பற்றிப் பலவாறு கண்டித்துப் பேசியிருப்பேன். ஆனல் ஒரு காரணத்துக்காக அதற்கு நான் என் நன்றியுள்ள வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியவனுக இருக்கிறேன். அதுதான் இந்த மகத்தான போராட்டத்தில் கலந்து கொள்ள எனக்கு வாய்ப்பு அளித்திருக்கிறது. இதுபோன்ற சந்தர்ப்பம் நிச்சயமாகச் சிலருக்குத்தான் கிடைக்கமுடியும்: நம் கஷ்டங்கள் எவ்வளவு அதிகமாகிறதோ-நாம் கடக்க வேண்டிய சோதனைகள் எவ்வளவு சிக்கல் நிறைந்ததாக ஆகிறதோ—அந்த அளவு இந்தியாவின் வருங்காலமும் அதிக அளவு ரம்யமாக இருக்கும். தனது சிறந்த, கண்யமிக்க இருபத்தைந்தாயிரம் மகன்களை இந்தியா சிறைச்சாலைக்கு அனுப்பியிருப்பது இந்தப் போராட்டத்தைக் கைவிடுவதற்காக அல்ல: இந்தியாவின் வருங்காலம் நிச்சயிக்கப்பட்ட ஒன்ருகும். சிறு அவநம்பிக்கையுடைய நம்மவர்கள் — ஆண்களும், பெண்களும்—இது பற்றிச் சந்தேகப்பட்டு, சிலவேளைகளில் தயங்கலாம்! சிந்தனை சக்தி உடையவர்கள் இந்தியாவுக்கு வரப்போகும் மேன்மையை உணரலாம்.

“என்னுடைய நல் அதிர்ஷ்டத்தை எண்ணி நான் வியப்படைகிறேன். விடுதலைப் போராடடத்தில் ஈடுபட்டு இந்தியாவுக்கு சேவை செய்வது பெருமையாகும். அதைவிட, மகாத்மா காந்தி போன்ற தலைவருக்குக் கீழே பணியாற்றுவது இரட்டிப்பு அதிர்ஷ்டம் தருவதாகும். தன் அருமை நாட்டிற்காகவும், தன் இலட்சியக் கனவு ஈடேறுவதற்காகவும் தன் உயிரை அர்ப்பணிப்பதைத் தவிர ஒரு இந்தியனுக்கு வேறு என்ன அதிர்ஷ்டம் வாய்க்க முடியும்!”

—இது எந்த மறியலைப் பற்றி எந்த இடத்தில் யார் கொடுத்த வாக்குமூலம்? அன்னியத் துணி பகிஷ்கரிப்பு மறியலுக்காக அலகாபாத் நீதி மன்றத்தில் பண்டித நேரு கொடுத்த வாக்கு மூலமா? அல்லது அகவிலை உயர்வுக் கண்டன மறியலுக்காக அண்ணு அவர்கள் வேலூரர் நீதி மன்றததில் கொடுத்த வாக்கு மூலமா?

—என்கிற ஐயப்பாடு இக் கட்டுரையைப் படிப்போர் மனதில் தோன்றினல், இக் கட்டுரையின் தலைப்பு பொருத்தமானதாகிவிடும்.

இதனல் பெறப்படுபவை (1) விடுதலை வீரர்களுக்கு ஏற்படும் சோதனைகள் ஒரே மாதிரியானவை. (2) விடுதலைப் போராட்டத்தின் முடிவும் எக்காலத்திலும், எச்சூழ்நிலையிலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்.

## தூய்மையான இதயம்!

**எங்களுடைய கொள்கைகளை நீங்கள் மதிக்காது இருக்கலாம். எங்களுடைய வாதங்களை நீங்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனல் எங்களுடைய தூய்மையான இருதயத்தை தயவு செய்து சந்தேகப் படாதீர்கள். நாங்கள் இந்தக் கொள் கையில் எங்களை ஈடுபடுத்திக் கொண்ட நேரத்தில் இழிமொழியும் பழிச் சொல்லும் எங்களை வந்து தாக்கும் என்று உணர்ந்த பிறகுதான் ஈடுபடுத்திக் கொணடோம்.**

சட்டமன்றத்தில்
அறிஞர் அண்ணு [13-11-61]

# இதய வாழ்த்து

அன்பில் தர்மலிங்கம், எம்.எல்.ஏ.

நறுமணம் வீசும் நன்மலர்களைச் சேகரித்து அன்றாடம் மக்களுக்கு அளித்து மகிழ்வித்து வரும் "முரசொலி", வழக்கம்போல் இந்த ஆண்டும் அறிஞர் பெருந்தகை அண்ணாவின் 54-வது ஆண்டு பிறந்த நாள் விழா சிறப்பு மலர் வெளியிடுவது கண்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்ற ஆண்டு தஞ்சைத் தலைநகரிலே சிறப்பாக நடைபெற்ற பிறந்த நாள் விழாவிலே கலந்துகொண்ட அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே, அடுத்த ஆண்டு திருச்சித் தலைநகரிலே நடைபெறும் பிறந்த நாள் விழாவிலே தாங்கள் கலந்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன்.

அதற்கு அந்த, "அரசியல் மேதை", "எதிர்காலமுணர்ந்த ஏந்தல்", "அடுத்த என் பிறந்த நாள் விழாவை, எங்காவது ஒரு சிறையில் நண்பர்களோடு கலந்து உரையாடுவதன்மூலம் கொண்டாடுவதையே பெருமையாகக் கருதுகிறேன்" என்று கூறினார்கள்.

அந்தத் தீர்க்கதரிசியின் வார்த்தை பலித்து, இன்று வேலூர் மத்திய சிறையிலே அருமை நண்பர்கள் பலரோடு அளவளாவி தன் எண்ணம் நிறைவேறியதை எண்ணி எண்ணி இறும்பூதெய்துகிறார்.

வடார்க்காடு மாவட்டத்திற்கு, அப்பெறற்கரிய பேறு கிடைத்தமைக்குப் பொறாமைப்படவில்லை. திருச்சி மாவட்டத்திலேயும் தலைநகரிலே, இருளைப் போக்கவந்த உதயசூரியன் அறிஞர் அண்ணாவின் திருவுருவம், சிறைக் கம்பிகளுக்குள்ளே இருப்பதுபோல் சித்தரித்து சிறப்பு மிக்க ஊர்வலமும், பிறந்த நாள் விழாவும் கொண்டாடி, ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்தல், குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் வழங்குதல், பள்ளிப் பிள்ளைகளுக்கு புத்தகம், சிலேட்டு வழங்குதல் போன்ற பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளனர். இதைப் போலவே எல்லா மாவட்டங்களிலும் சிற்றூர், பேரூர், நாடு-நகரம், பட்டி தொட்டி அனைத்திலும், நடைபெறுமென்பதிலே சந்தேகமில்லை.

வெளியே மாத்திரமல்ல, சிறைக்கு உள்ளே இருக்கிற ஒவ்வொருவரும், தங்கள் இதயத்திலே குடிகொண்டிருக்கிற அண்ணாவோடு விழாக் கொண்டாடிக்கொண்டு தானிருப்பார்கள்.

அறிஞர் அண்ணாவைக் கேட்டுக்கொண்ட நானும், அண்ணா அவர்கள் சிறையிலிருக்கிற நேரத்திலேயே, திருச்சி சிறையிலே இருந்துகொண்டு, இதயச் சிறையிலே குடிகொண்டிருக்கிற அண்ணாவோடு அளவளாவி, மகிழ்ந்து அண்ணா வாழ்க வாழ்கவென வாழ்த்திக் கொண்டே இருக்கிறேன். வாழ்த்திக்கொண்டே இருப்பேன்.

அந்த அரசியல் ஞானியின் எண்ணம் நிறைவேறியது போலவே, இலட்சியம் நிறைவேற, அல்லும் பகலும் அயராது எண்ணத்தாலும், எழுத்தாலும், பேச்சாலும், மூச்சாலும், அரும்பாடுபட்டு கட்டிக் காத்து வளர்த்து வரும் கழகம் பிறந்த நாளும், அவர் பிறந்த நாளை ஒட்டியே இருப்பதும் பெருமைக்குரிய ஒன்றாகும். எனவே இந்த இலட்சியமும் ஈடேறியே தீருமென்பதற்கு



# கத்தியைத் தீட்டுவோருக்கு...

ஒரு பிரிவினை சக்தி என்று உங்களால் அழைக்கப்படுகிற சக்தியைத் தேர்தலிலே இலட்சக் கணக்கான பணத்தைச் செலவழித்து ஒழித்துக் கட்டலாம் என்று 'திட்டம் இடுவீர்கள் என்பதும் நாங்கள் அறியாததல்ல. ஆனால், நாங்கள் கேட்கிற கோரிக்கை இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. என்றால், நாங்கள் அத்தனை பேர்களும் எங்களுடைய ரத்தத்தை சிந்தி அடையவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். அந்த இரத்தமும் உங்கள் கரத்தில் இருக்கும் கத்தியால்தான் வெளியாகவேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

ஆகவே, கத்தி இருந்தால் கூர்மையாகத் தீட்டிக் கொள்ளுங்கள். சட்டம் இருந்தால் விரைவில் அமுலுக்குக் கொண்டு வாருங்கள்.

எப்படிப்பட்ட பயங்கரமான நடவடிக்கைகளிலே ஈடுபடுவதானாலும் அவைகளுக்கெல்லாம் சளைக்காமல் இருப்பதற்குக் காரணம்-தனிப்பட்ட முறையில் நாங்கள் பெரிய துணிச்சல்காரர்கள் என்பது அல்ல-நாங்கள் அந்த இலட்சியத்தை அவ்வளவு பரிபூரணமாக நம்பிக் கொண்டிருக்கிறோம்.

-சட்டமன்றத்தில்

அறிஞர் அண்ணா (13-11-61)

வேறு எடுத்துக்காட்டுத்தேவை இல்லை.

திராவிடத்தின் ஒப்பற்ற வழிகாட்டி அறிஞர் அண்ணா அவர்கட்கும், அவர் தம் இலட்சியம் நிறைவேறப் பாடுபடும் தி. மு. கழகத்துக்கும் ஆக்கமும், ஊக்கமும், வலிவும், பொலிவும் தேடித்தரத் தக்க வகையில், ஆரம்ப நாள் முதல் தொடர்ந்து, நாதம் பிறழாமல், ஓசை குறையாமல், வெற்றி முரசறைந்து வீரநடை போட்டு ஒலித்துவரும் "முரசொலி"யின் துவக்க நாளும், அதே நாளாக இருப்பது கண்டு பாராட்டுகிறேன். முரசொலி கண்ட ஆசிரியர் கலைஞர் மு. க. அவர்கட்கும், உறுதுணை புரிந்து வரும் மாறனுக்கும், புகைப்பட நிபுணர் அமிர்தம், துணை ஆசிரியர் அடியார், ஓவியர் செல்லப்பன், மற்றும், அன்னாடம் அரும் பணியாற்றி வரும் அச்சக, அலுவலக நண்பர்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்பின் திருவுருவம், ஆற்றல்மிகு படைத் தளபதி, அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே பணியாற்றி, அவர்களது காலத்திலேயே, "இன்பத் திராவிடம் அடைந்தே தீருவோம்" என்ற சூளுரையை இந்தப் பொன்னான நன்னாளில் ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதையே என் வாழ்த்துச் செய்தியாக அனுப்புகிறேன்.

என் இதய வாழ்த்துக்களை மலர்மாலையாக்கி அறிஞர் பெருந்தகையின் பொற்பாதங்களில் குவிக்கிறேன்.

வாழ்க அண்ணா!

வளர்க தி. மு. கழகம்!

வெல்க திராவிடம்!

அன்பன்,

**அம்பில் தர்மலிங்கம்**

# அண்ணா பிறந்திராவிட்டால்?





தென்னகத்தின் சார்பில் அதிக மந்திரிகள் ஏற்பட்டி-ருக்க மாட்டார்கள்
காங்கிரஸ்
காங்கிரசிற்கு மூக்கணாங்-கயிறு போட நாதியிருக்காது.
RAJAYA SABHA
திராவிடத்தின் குரலை வெளி-நாட்டார் அறிந்திருக்க முடியாது.
நமக்கெல்லாம் தென்னகத்தில் பிறந்த தலைமை கிடைத்திருக்-காது.
பெருந்தனக்காரர்களுக்குரிய அரசியல் மக்கள் மன்றத்திற்கு வந்திருக்காது.
கொலைகாரப் புரட்சிக்கும் பிற்போக்கு இருளுக்குமிடையே நடுவழி காட்டும் ஒளிவிளக்கு கிடைத்திருக்காது.


கைத்தறி
வாங்கலியோ...
கைத்தறி!
தென்னகத்தின் மிகப் பெரிய
தொழிலான கைத்தறி கல்லறை
போயிருக்கும்.
தமிழக அரசாங்கமே ஊட்டி மலை-
யிலிருந்து, ஆளும் கருப்புத் துரை
சாம்ராஜ்யமாயிருக்கும்.
சட்ட மன்றத்தில் தமிழ் மணம்
கமழ்ந்திருக்காது.
நேரு போன்றவர்கள் தென்னாட்டாரை
நான்சென்ஸ் பட்டத்திற்குரியவராக்
கியிருப்பார்கள்.
மக்களிடையே சாதிப் பிரிவும்
மதப்பிரிவும் தலைவிரித்து
ஆடியிருக்கும்.
ஒவ்வொரு துறையிலும் சிறந்து
விளங்கும் தம்பிமார் படை வரிசை
கிடைத்திருக்காது.



முஸ்லிம் சமுதாயத்துடன் அன்புறவு ஏற்பட்டிருக்காது!
பொங்கலுக்கும் தமிழ்மக்களின் நாகரிகத்திற்கும் மதிப்பு வந்திருக்காது!
காந்தியாருக்குப்பின் அகிம்சை கொள்கை-யைக்காக்க ஆள் இருக்காது!
இத்தனைக்கும் மேலாக
அவர் இல்லையேல் நாம் இல்லை!

# ஒரு பகுதி முடிந்தது மறு பகுதி எப்போது?

சிந்தனைச்சிற்பி சி. பி. சிற்றரசு

சரிகை குல்லா, வெள்ளித் தடி, மோட்டார் சவாரி ஈசிச் சேர் அரசியல், சர் ராவ் பகதூர் திவான் பகதூர் என்ற பட்டங்கள் அவ்வளவும் பழைய நீதிக் கட்சித்தலைவர்களுக்கு வெறும் முக்காலணா வெள்ளைக் குல்லாய்கள் கொடுத்தவை.

இவர்கள் என்றுமே தலை எடுக்கமாட்டார்கள். ஐயாயிரம் அடி ஆழப்புதைத்து விட்டோம் என்று சத்திய மூர்த்தியார் பேசக் கேட்டிருக்கின்றோம். அவர்கள் இன்றும் சரிகைக் குல்லாய்கள் இல்லாத நம்மை, வெள்ளைக் கைத்தடிகள் இல்லாத நம்மை வாகன வசதிகள் இல்லாத நம்மை, சர் ராவ்பகதூர், திவான் பகதூர் பட்டங்களே இல்லாத நம்மையும் அதே கணக்கில் சேர்த்து பேசுவதையும் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். மக்களும் கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்.

நம்மை விட மக்கள் வெகு விழிப்பாக இருக்கின்றார்கள் என்று அடிக்கடி அறிஞர் அண்ணா சொல்வார்கள்.

மக்கள் எல்லாக் கூட்டங்களுக்கும் போகிறார்கள் நமக்கு அந்த வாய்ப்பில்லை; இரவு காலங்களில் பல்வேறு செய்தித் தாள்களைப் படித்த பல தோழர்கள் திண்ணைகளிலே உட்கார்ந்து அலசி ஆராய்ந்து தர்க்கவாதம்புரிந்துக்கொண்டிருக்கிறார்கள்: நமக்கு அந்த வாய்ப்புமில்லை: நேரமுமில்லை, அவர்கள் ஒருவருக்கொருவர் சந்திக்கும்போது எந்தக் கேள்வியையும் எந்த நிலைக்கும் போய்க் கேட்கிறார்கள்: சண்டை வந்தாலும் சரி. மண்டை உடைந்தாலும் சரி என்று. நம்மிடம் அந்த அளவுக்குக் கேட்கத் துணிய மாட்டார்கள். நம்மை மேடைகளிலே கேட்பதோடு சரி மற்ற நேரங்களில் நிருபர்கள் கேட்டால் உண்டு: ஆகவேதான் அரசியலின் எந்த மூலைக்கும் போய் எதையும் ஆராய்கிற வாய்ப்பு நமக்கிருப்பதைவிட பொது மக்களுக்கே அதிகமென்பார். பொது மக்களை அந்த அளவுக்கு சிந்திக்கத் தூண்டியது எது? கதர் குல்லாய்களின் கணக்குப்படி சரிகைக் குல்லாய்கள் அல்ல, அவர்களை வைத்திருந்த பட்டங்களை எல்லாம் வெள்ளைக்காரன் இருக்கும் போதே தூக்கி எறியும்படி சேலம் மாநாட்டிலே தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து அதை நிறைவேற்றி வைத்தவரும் அண்ணாதான்: அதன் பிறகும் இப்படிச் செய்கிறார்கள் என்றால் கருத்துக் குருடர்கள் என்பது தவிர வேறில்லை.

இன்றைய தி. மு. கழகத்தினர்; பொருள் ஒன்று தான் சமுதாய அந்தஸ்தை உயர்த்த முடியும் என்பதை தெரிந்து கொள்ளாதவர்கள், லட்சிய சங்கிலியின் தொடர்பு அசைக்க முடியாமல் இருக்கச் செய்வதே வீழ்ந்து விட்ட சமுதாயத்தின் அறை கூவல் என்பதை தெரிந்துக் கொண்டவர்கள்: என்றோ எழுதப் போகிற விடுதலை வரலாற்றில் அங்கமானவர்கள்: விடுதலைப் போரில் மடிந்து மண்ணான கல்லறையில் முளைக்கும் புல்லையையே வரும் மாடுகளுக்கு இரையாக்குவதற்கு முன்னால் அந்த மாட்டுச் சின்னத்தின் கோரப் பற்களிடையே சிக்கி மாண்டாலும் கவலை இல்லை என்ற மரணப் போர் நடத்தும் வீரர் பட்டியல்தான் தி. மு. கழகம். இதை எப்படிக் கொல்லாம் என்பதிலே சிலர் ஈடுபட்டிருக்கின்றார்கள். எல்லாரும் கொல்ல வேண்டுமென்கிறார்கள், அதில் ஒருவர் மட்டும், கொல்லாதீர்கள் கொன்றால் அதற்கு இரட்டை உயிர் வந்து விடும் என்கிறார் கொன்ற பிறகும் உயிர் ஒன்றுக்கு இரண்டாக வந்து விடும் என்று நீ உண்மையாகவே நம்புவாயானால் வீரமாகக் கொல்லு, கொன்ற பிறகும் உயிரிருக்கும் என்றால், நீ கொல்லவில்லை. கொல்ல தைரியமில்லை. கொல்ல முடியாது, கொன்றாலும் சாகாது. அட, பைத்தியமே ஒரு விடுதலை இயக்கத்தின் ஒரு பகுதி முடிந்தது மறுபகுதிஎப்போது என்று கேட்ட வண்ணமிருக்கின்றனர் மக்கள்.



## முதல் நாள்

கருப்புக் குல்லாய் மாட்டப் பட்டு சிறையில் அடைக்கப் பட்டிருக்கிறேன். எனக்கு இன்னும் ஆறு நாளில் தூக்குத் தண்டனை. நான் செய்தகுற்றம் நான் வாழும் நாடு எங்களுக்கு என்றேன். திராவிடம், பாரதத்திலிருந்து பிரிய வேண்டுமென்றேன். அந்த இலட்சியத்தை எழுத்தில் வைத்தேன், பேச்சில் வைத்தேன். இதைத்தவிர வேறு ஒரு குற்றத்தையும் நான் செய்யவில்லை. ஆனல், அரசாங்கமோ என்னை 'பலாத்காரத்தைத் தூண்டும் எழுத்தாளன்' என்று கூறிற்று; பலாத்கார இயக்கத்தோடு தொடர்புடையவன் என்று கூறி தூக்குத் தண்டனையைப் பரிசாகத் தந்திருக்கிறது.

"நான் அண்ணுவின் தம்பி; எனவே, பலாத்காரம் கொள்கையளவில் கூட கிடையாது"- என்று நீதிமன்றத்திலும் சொன்னேன்; தூக்குமன்றத்தி




லும் சொல்லப் போகிறேன்.

தூக்குத் தண்டனை உனக்கு-என்று நீதிபதி சொல்லும் போது, உள்ளபடியே திருமணம் உனக்கு என்று என் தந்தை சொன்னபோது அடைந்த மகிழ்ச்சியையும், மனதில் ஓர் குறுகுறுப்பையும் பெற்றேன்.

அலிப்பூர் சிறையில் என் அண்ணன் அம்பர் சர்க்கா நூற்கும்போது - பெல்லாரிச் சிறையில் என் ஆசிரியர்-கலைஞர் தறிக்குழியில் நோகும் போது—எனது தலைவர்கள் எல்லாம் உடல் வலியெடுக்க உழைக்கும்போது எனக்குக் கிடைத்த தூக்குத் தண்டனை எம்மாத்திரம்?

என்று என்னை தி. மு. கழக உறுப்பினனாக பதிவு செய்து கொண்டேனோ, அன்றே எதையும் ஏற்கத் தயாராகிவிட்டேன்.

**திரு, சி. என். அண்ணாதுரை என்ற ஒரு மனிதரை 'அண்ணா' என்று எவன் அழைக்கிறானோ அவனை விரைவில் சாவு அழைக்கப் போகிறது என்றுதானே பொருள்?**

உங்களுக்கு நான் இன்பம் தர அழைக்கவில்லை; ரத்தம் கொட்டவும், உயிர் தரவும் தான் அழைக்கிறேன்—என்று என் உயிரினும் இனிய அண்ணாவே!—அன்று நீ பேசினாய்! இதோ உன் தம்பி உயிர்தர முனைந்துவிட்டான்.

[யாரோ வருகிறார்கள். சிறையில் எனக்குக் கிடைத்த காகிதங்களும்குறைவு. எனவே குறைவாக எழுதப்போகிறேன்; குறைந்த காகிதத்தில் என் நெஞ்சில் நிறைந்த அனுபவத்தை எழுதப்போகிறேன்.]

## இரண்டாம் நாள்

**என்னை அழைத்துக்கொண்டு போனவர்கள், எழுதும்**

என் வலக்கரத்தை உடைத்தனுப்பியிருக்கிறார்கள். எனவே இடதுகையால் இதை எழுதுகிறேன்.

“உங்கள் கட்சியின் ரகசியத் திட்டமென்ன?” என்று கேட்டு அடித்தார்கள். “ரகசியம்-எங்கள் இயக்கத்தில் இல்லாத பொருள்”--என்றேன். முரட்டு அதிகாரி மூர்க்கத்தனமாக என் முகத்தில் தாக்கினான்; வாயிலிருந்து ரத்தம்வழிந்தது. இன்னும் அதைத் துடைக்கக் கூட இல்லை; கடைவாயில் ரத்தம் வரண்டு கிடக்கிறது.

ஏ, ரத்தமே! உன் பெருமையே பெருமை! இலட்சிய வீரனின் ரத்தம், உலகப் புகழ் பெற்ற எழுத்தாளனின் எழுத்தைவிட வன்மையானது என்பதைப் படித்திருக்கிறேன். என் ரத்தம், நாளை எழப்போகும் திராவிடமாளிகைச் சுவற்றின் சாந்தாகப் பயன் படட்டும்!

என் வலது கை வீங்கிக் கிடக்கிறது, இடதுகை எழுதத் தெரியாமல் தவிக்கிறது! என்னையே இந்தப் பாடுபடுத்துகிறவர்கள், என் சோதரர்களை என்னபாடுபடுத்துவார்களோ? எனது கண்ணில் நீர் வழிகிறது. ஆம்; நான் அழுகிறேன், எனக்காக அல்ல; என் தோழர்களுக்காக!

அழுகிறேன்;இது ஒருகாலம். சிரித்தேன் அது ஒரு காலம்!

ஆம்; அழ ஒரு காலமுண்டு; சிரிக்க ஒரு காலமுண்டு; விழ ஒரு காலமுண்டு; எழ ஒருகாலமுண்டு! அணைக்க ஒருகாலமுண்டு! அடிக்க ஒரு காலமுண்டு! ஏ, வடநாட்டு ஆதிபத்திய வெறியர்களே, இந்தியாவை இணைக்க ஒரு காலமிருந்தது; பிரிக்கவும் ஒருகாலமிருக்கிறது! அது விரைந்து வந்து கொண்டிருக்கிறது!

## மூன்றாம் நாள்

வழக்கம் போல் நேற்றிரவும் என்னை அடித்தார்கள். “அண்ணாவாம்; அண்ணா!”—என்று கேலி பேசியவாறு, நெஞ்சில் எட்டி உதைத்தான் ஒரு அதிகாரி! நெஞ்சில் அடிபட்டுக் கீழே விழுந்தேன். ஆனால் நெஞ்சில் குடியேறிய என் அண்ணாவை அவனால் தள்ள முடியுமா?

அந்த அதிகாரிக்கு என் அண்ணனைப் பற்றி என்ன தெரியும்?

உலகில் எத்தனையோ பேர் இருந்தார்கள்; இந்த உலகை ஆட்டிப் படைத்தார்கள்; இறுதியில் இறந்துபட்டார்கள்; ஆனால், என் அண்ணனைப் போல் எவருமில்லை; அவர் சொல்லுக்குள்ள வலிமை எவரும் பெற்றதில்லை!

**அண்ணா; நேற்று அவர் ஒரே ஒரு குடும்பத்துக்கு அண்ணா; இன்று அவர் நாட்டிற்கே ஒரு அண்ணா; நாளை இந்த உலகிற்கு ஒரே ஒரு அண்ணா!**

அண்ணா மீது இந்திய சாம்ராஜ்யத்தை உடைப்பதாகக் குற்றச்சாட்டு! ஆம்; அவர் ஒரு சாம்ராஜ்யத்தை உடைக்கிறார் சேற்றில் உழலும் தன் சகோதரர்களுக்காக!

அடிபட்டதால் என் உடல் ஆடுகிறது; உள்ளம் மட்டும் ஆடவில்லை! ஆடாத உள்ளத்திலே ஒரு ஆடும் ஊஞ்சல்; அந்த ஊஞ்சலில் ஆடும் உருவம், நாளை இந்த உலகாளப் போகும் என் அண்ணன்!

வார்த்தை பொய்க்காத ஒருவர் உண்டென்றால். அது என் அண்ணாதான்!

சிங்கத்தின் வாய்—அக்கினியின் உக்கிரம்—புயலின் பேய்த்தன்மை—கோரச் சிறையின் கொடுமை—இவற்றைத் துச்சமென மதிக்கும் தம்பிமார் படை இருக்கும் வரை......

**புல் உதிரும்; பூ உதிரும்; பூவுலகில் நின் புகழ் உதிராது அண்ணா!**

## நான்காம் நாள்

என்னால் இன்று எழுதமுடியவில்லை. அந்த அளவுக்கு என் எலும்புகள் நொறுக்கப்பட்டிருக்கின்றன.

## ஐந்தாம் நாள்

நேற்று மரணமே வந்தது போன்ற வேதனையை அனுபவித்தேன். வேதனை, அந்த ‘திராவிடத்’தால் வந்தது! ஒரு உண்மையும் புரிந்தது.

**திராவிடம் என்பது ஒரு போராட்டத்தின் பட்டயம்; பாவிகளின் கனவல்ல! கனவென்றால் எங்களுக்கேன் தடை? கொடுமையான சிறை?**

நாளை எனக்குத் தூக்குத் தண்டனை! நேற்று எனக்குத் தூக்குமேடையைக் காட்டி, அதில் தொங்கியதால் நாக்குத் தொங்கிப்போன பிணங்களைக் காட்டி, “மன்னிப்புக் கேள்; விடுதலை உனக்கு!”—என்றார்கள்!

சிரிப்புத்தான் வந்தது! அந்த விடுதலையும், பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்தியும் ஒன்று—என்று கூறினேன்; அதிகாரிகள் அசந்துபோனார்கள்!

உயர்ந்த லட்சியத்தைக் காதலிப்பவனுக்கு இந்த சாதாரண பயமுறுத்தல்கள் சாரமற்றுப் போனவை என்பதை அவர்கள் உணரவில்லை பாவம்!

## கடைசி நாள்

இன்று நான் இறக்கப் போகும் நாள் என்பதைவிட அண்ணன் பிறந்த நாள் என்பதே என் நினைவு முழுவதும் நிரம்பியிருக்கிறது!

**என் அண்ணன் எதற்குப் பிறந்தானோ - அதற்கு- அந்த திராவிட விடு**

தலைக்கு நான் இறக்கிறேன்.

எனக்கு இன்று அதிகாலையில் ஐந்து மணிக்கு தூக்குத் தண்டனை., இதை நான் அதற்கு முன் எழுதுகிறேன்.

பொழுது விடிவதற்கு முன் என் உயிர் போய்விடும்; ஆம்; அடிமை திராவிடத்தின் பொழுது விடிவதற்கு முன் என் உயிர் போய்விடும்!

மரணக் கட்டுகள் என்னை இறுக்குகின்றன; தியாகம் தூக்குமேடையிலிருந்தபடி என்னை அழைக்கிறது! திராவிட கீதம் என் செவியில் மெல்ல ஒலிக்கிறது! அண்ணன் விடும் பெருமூச்சை நான் உணர்கிறேன். சாவை எதிர்நோக்கும் இந்த நிலையிலும் இந்த உலகிற்கு ஒரு செய்தி தனை விடுக்கிறேன்.

அகிலத்தின் சரித்திரத்தை எழுதவேண்டிய கையால் அம்பர் சர்க்காவைச் சுற்றிக் கொண்டு என்னைப் போன்றோரை நினைத்து கண்ணீர் உகுக்கும் மாமேதை அறிஞர் அண்ணாவின் ஒப்புயர்வற்ற அறிவின் மீது ஆணை.........

தறிக்குழியிலும், கட்டாந் தரையிலும், செக்கடியிலும், நொந்துயிர் விடுகின்ற என் தலைவர்களின் இணையற்ற இலட்சியத்தின் மீது ஆணை...

என்னைப் படிக்க வைத்ததோடு அடிமை நோயால் துடிக்கும் தாயகத்திற்காக மனமுவந்து என்னைத் தாரை வார்த்த என் தாய் தந்தையரின் ஈடுசோடில்லாத் தியாகத்தின் மீது ஆணை......

என்னைக் கைது செய்ய போலீஸ் படை வந்தபோது பூட்ஸ் சத்தம் கேட்டு என் காலை கெட்டியாகக் கட்டிப் பிடித்துக்கொண்ட என் பிள்ளைக் கலி தீர்க்கவந்த பேசும் பொற்சித்திரத்தின் மீது ஆணை......

தன் இன்பத்தை, என் இன்ப இலட்சியத்திற்காக தியாகம் செய்து. நாளை விதவைக் கோலம் ஏற்று நிற்கப் போகின்ற என் பேடை மாங்குயில் மீது ஆணை......

**ஏ, வடநாட்டு ஆதிபத்தியக் காரர்களே, தன் நாட்டு அடிமை நிலையுணராத சோதரர்களே! உங்கள் ரத்தத்தில் ஒரு சொட்டைக்கூட சிந்த வைக்காது, எங்கள் இரத்தத்தைச் சிந்தியே தான் திராவிடத்தைப் பெறப்போகிறோம்.**

இதோ, மரண மேடைக்கு அழைக்க வந்து விட்டார்கள்; தூக்குக் கயிற்றால் இறுக்கப் பட்டு என் தலை தொங்கும் வரை......என் நாவே; என் உள்ளமே; என் உடலின் ஒவ்வொரு அங்கங்களே!

திராவிடநாடு திராவிடருக்கே!

அறிஞர் அண்ணா வாழ்க! —என்றே முழங்குங்கள்;முழங்குங்கள்; முழங்குங்கள்.

[மறியல் அறப்போரில் சிறை சென்ற ஒரு இலட்சியவீரன் தி. மு. க. தடை செய்யப்பட்டால் தன் நிலை என்ன என்பதைப் பற்றிக் காணும் இலட்சியக் கனவு.]

---

## புறநானூற்று வரிகள்

உங்களை எல்லாம் நம்பித்தான் நான் அரசாங்கத்தின் அறைகூவலை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். எங்களைப் பொறுத்தவரை வீட்டிற்கும் சிறைச்சாலைக்கும் வேறுபாடு கிடையாது.

இன்று நீங்கள் எனக்களித்த இந்த யாழை என்னுடைய வீட்டில் வைத்து மனைவி மக்கள் புடைசூழ மீட்டிக் கொண்டா இருக்கப் போகிறேன்? நிச்சயம் கிடையாது. அந்த அனுபவங்களெல்லாம் விடுதலை வீரர்களைப் பொறுத்த வரையில் கற்பனையாகவே இருந்து அழிந்து போய்விடக் கூடியவைகளே!

தஞ்சையிலே என் பிறந்த நாளை நானும் உடனிருக்கக் கொண்டாடுகிறீர்கள். அடுத்த ஆண்டு என் பிறந்த நாளை எந்தச் சிறைச் சாலையிலாவது கொண்டாடுவதாக இருந்தால் அதுவே எனக்கு மகிழ்ச்சியைத் தரும்.

- அறிஞர் அண்ணா

'61 செப். 15, தஞ்சை பிறந்தநாள் விழா



# புலிக்கூண்டில் தலையிடாதீர்

### ஆனந்தம்



"அடுத்தமுறை ஐம்பத்து நான்காம் ஆண்டில்
அரசினரின் விருந்தாகச் சிறைக்குள் செல்லக்
கொடுத்துவைத்தால் மகிழ்வுறுவேன்" என்றார்; தஞ்சை
கொண்டாடிச் சிறப்பித்த பிறந்த நாளில்
விடுத்தஒரு கோரிக்கை நிறைவே றிற்று,
விடுதலைக்குப் போராடும் வீர ருக்குக்
கொடுத்திருக்கும் பெரும்பரிசு இதுபோல் உண்டோ?
கொள்கைதவழ் குணக்குன்றாம் அண்ணா வாழ்க!

வள்ளுவனும் பெருந்தகைக்குப் பின்னர் எம்மை
வாழ்வித்து வழிகாட்ட வந்த அண்ணல்—
தெள்ளுதமிழ் மண்காக்கப் பிறந்த பேரோன்—
தென்னகத்தார் இதயமெலாம் நிறைந்த தூயோன்—
துள்ளிவரும் எதிர்ப்புகளைப் புன்ன கைப்பால்
துடைத்தெறியும் படைவீரன் துணிவு மிக்கோன்—
எள்ளியவர் ஏசியவர் திகைத்துத் தேம்ப
எவர்துணையும் இல்லாமல் கழகங் கண்டார்!

காடுகளில், மலைகளிலே ஒளிந்து வாழ்ந்து,
கள்வரைப்போல் நள்ளிரவில் பதுங்கி வந்து,
கேடுதரும் செயல்களிலே ஈடு பட்ட
கீழினத்துத் தோழர்களோ? அல்ல வேநாம்!
நாடுதனை மீட்பதற்கு நம்மை நாமே
நரபலியாய்த் தருவதற்கும் மனமி சைந்தே
வீடுதரும் சுகம்மறந்து, சிறைச்சா லைக்குள்
வெள்ளமென்ன பாய்ந்துசென்ற தொண்டர்
அன்றோ!



அனைத்தையுமே உணர்ந்தவரும் அறியார் போல
    அவதூறு கூறிநமை அழிப்ப தற்குத்
தனித்தனியே முயன்றார்கள்; மூக்கு டைந்தார்!
    தரங்கெட்ட பெருமனிதர் ஒன்று கூடிக்
கனைத்தெழுந்து குமுறுகிறார்! தடைவி திக்கக்
    கருதுகிறார்! மக்களாட்சி நடத்தும் நாடாம்!!
நினைத்ததெல்லாம் பேசுகின்றார்! நேர்மை யுள்ள
    நிலையான கொள்கையெனில் அச்சம் ஏனோ?

யாருக்கும் வரலாறு தெரியா தென்றா
    எண்ணுகின்றார்? எவ்வளவு கால மாக
யாருக்குத் தெரியுமிந்த இந்தி யாவை?
    ஒருநாடாய்ச் செய்ததெவன்? எவ்வா(று) என்று
போருக்கு வந்ததெவன் தென்னாட் டுக்குள்?
    "புவிமுழுதும் ஆள்வதற்கு நீதான்!" என்றே
யாருக்கு யார்உரிமை தந்து சென்றார்?
    எதனால்நீர் எங்களையும் அடக்கி ஆள்வீர்?



விருப்பமுடன் விடுதலையைத் தந்து விட்டால்
    வீண்தொல்லை குறைத்திடலாம்! அமைதி காணத்
திருப்புமுனை இஃதென்றே தெரிந்து கொள்வீர்!
    தீயவரின் வெற்றுரையை நம்ப வேண்டாம்!
'இருப்பதெல்லாம் ஒரேஉயிர்தான்—உடலை விட்டும்
    ஏகுவதும் ஒரேமுறைதான்!' என்போர் வீரத்
திருப்புகழை வருங்காலம் பாடு மன்றோ?
    திருவிடத்துப் புலிக்கூண்டில் தலையி டாதீர்

---

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

நிரு. என்ன செய்வார்கள்?

முர: உங்களுக்குத் தெரியாதா? திராவிடக் கலாச்சாரப் பாதுகாப்புக் கழகம் என்கிற புதிய அமைப்பினை நேற்று ஆரம்பித்திருக்கிறார்களே!

நிரு; அப்படியா? அதன் நோக்கமும் திராவிடநாட்டுப் பிரிவினை தானா?

முர; ஏனெய்யா: அந்த இயக்கமும் தடை செய்யப்பட்டு, அவர்களும் சிறை செல்லவேண்டும் என்று கருதுகிறீர்களா? அவர்கள் பிரிவினையைப் பற்றி வாயை திறந்து ஒரு வார்த்தை பேச மாட்டார்கள்!

நிரு; அதாவது...

முர; ...பிரிவினை வேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லி அரசியல் சட்டத்தின் புதிய திருத்தத்தை மீற மாட்டார்கள். அதே நேரம் பிரிவினை கூடாது என்று சொல்லி துரோகிகளாக மாறவும் மாட்டார்கள்!

நிரு; பிறகு அவர்கள் மேடையில் என்னதான் பேசுவார்கள்?

முா; பிரிவினை கேட்டால் பத்து ஆண்டு கடுஞ்சிறை என்று கூறும் அரசியல் சட்டத்தின் 13-வது திருத்தம் அநியாயமானது: அதை வாபஸ்பெறவேண்டும்.' அல்லது அரசியல் சட்டத்திற்கு இன்னொரு திருத்தம் கொண்டு வந்து அந்தக் கொடிய திருத்தம் செல்லுபடியாகாமலே செய்யவேண்டும்—இப்படிப் பேசினால் அரசாங்கம் கைது செய்து நடவடிக்கை எடுக்குமா?

நிரு; அரசியல் சட்டத்தின் ஒரு திருக்தத்தை வாபஸ் பெறவேண்டுவதற்கோ; அல்லது புதிய திருத்தம் ஒன்று கொண்டு வருவதற்கோ ஆதரவு திரட்ட அனைவருக்கும் உரிமையிருக்கிறது என்று கருதுகிறேன். அதனால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கமுடியாது என்பது என் தனிப்பட்ட கருத்து.

முர: அப்படியானால், திராவிடக் கலாச்சாரப் பாதுகாப்புக் கழகத்தினர் அப்படி மேடையில் பேசுவதை யார் ஆட்சேபிக்க முடியும்?

நிரு; சபாஷ்!

முர; இன்னும் கேளுங்கள்! "தி. மு. கழகம் சென்ற தேர்தலில் 34 லட்சம் வாக்குகள் பெற்ற ஒரு அருமையான எதிர்க்கட்சி. அதற்குத் தடைவிதித்தது ஜனநாயகத்துக்கு நேர்ந்த விபத்தாகும். எனவே, தி. மு. க. வின் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கி, அதை மீண்டும் தேர்தலில் கலந்து கொள்ள அனுமதிக்கவேண்டும்"—இப்படி தி. க. பா. க. கூட்டம் போட்டு, மாநாடுகள் நடத்தி, தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

நிரு; அது எப்படி எடுக்க முடியும்? இதில் ஒன்றும் தவறு இல்லையே!

முர; அப்படியானல் தி. க. பா. க. அம்மாதிரியான முறைகளில் செயலாற்றுவதை யார்தான் தடுக்க முடியும்?

நிரு; பிறகு?

முர; பிறகென்ன? காலம் ஓடும். ஐந்துஆண்டுகளுக்குப் பிறகு — யார் அரசியல் அமைப்பைத் திருத்தி அண்ணாவையும் அவரது அருமைத் தம்பிகளையும் சிறையில் அடைத்தார்களோ, யார் தி.மு. கழகத்தை தேர்தலில் ஈடுபட முடியாதவாறு தடை விதித்தார்களோ—அவர்கள் தங்கள் செயலுக்காக மக்களின் அனுமதி பெற்றுத் தீரவேண்டிய அந்த மகத்தான பொதுத் தேர்தல் வரும்.

நிரு; ஓகோ...இதற்குத்தான் ஐந்தாண்டு என்று முதலில் குறிப்பிட்டீர்களோ?

முர; ஆமாம்...

நிரு. தேர்தல் வந்தால் உங்களுக்கு என்ன? தி. மு கழகம்தான் தேர்தலில் ஈடுபட முடியாதே!

முர; தி. மு. கழகம் ஈடுபட முடியாது. ஆனல் திராவிடக் கலாச்சார பாதுகாப்புக் கழகம் தேர்தலில் ஈடுபடுவதை யாரும் தடுக்க முடியாது. தி. மு. கழகத் தடையை திரும்பப்பெற வேண்டும், அரசியல் சட்டத்தின் புதிய திருத்தத்தை கைவிடவேண்டும், அண்ணாவையும் அவரது தம்பிகளையும் விடுதலைசெய்ய வேண்டும்—தி. க. பா. க. வின் தேர்தல் அறிக்கையில் இந்தப் பிரச்னைகள்தான் முக்கிய இடம் பெறும்!

தி. மு. கழகத்தை ஒரு இராணுவத்திற்கு ஒப்பிட்டேன் அல்லவா?

நிரு; ஆமாம்!

முர. பட்டாளத்தின் ஒரு பகுதி எதிரி கையிலே சிக்கி கைதிகளாக மாறினல் மீதமிருக்கும் பகுதி, எதிரிகளை வெற்றிகண்டு சிறைக் கதவுகளை உடைத்தெறிந்து அவர்களை விடுதலை செய்யும்வரை ஓயாதல்லவா? அது வேட்டு முறைப் போர். சிறைகளை வெடி வைத்துத் தகர்த்து கைதானவர்களை விடுவிக்கலாம். நாங்கள் நடத்துவது ஓட்டு முறைப் போராயிற்றே! சிறை செல்லாமல் வெளியிலிருக்கும் எங்கள் படைவீரர்கள் முடிந்த அளவு ஓட்டு ஆயுதத்தை சேகரித்து தி. க. பா. க, வை ஆட்சிக்கு கொண்டுவருவார்கள்!

நிரு; இது முடிகிற காரியமா?

முர: ஏன் முடியாது? திருச்செங்கோடு தேர்தல் அதற்கான ஒத்திகைதானே! முன்பு காங்கிரஸ் தேர்தலை பகிஸ்கரித்து தெரு தூங்கி நின்றபோது காங்கிரசிலிருந்து பிரிந்து சுயராஜ்ய கட்சி தேர்தலில் போட்டியிடவில்லையா? அதைக் காங்கிரஸ் ஆதரிக்கவில்லையா? மேலும், 1967-தேர்தலில் தி. மு- கழகம் ஆட்சியைக் கைப்பற்றும் என்று அரசியல் விமர்சகாகள் முன்பே கூறியிருக்கிறர்களே! வெளியில் இருக்கும் எங்கள் படைக்கு அறிஞர் அண்ணாவையும் அவரது ஆயிரமாயிரம் தம்பிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்கிற உணர்வைத் தவிர உற்சாகம் தரும் மாமருந்து வேறு என்ன இருக்க முடியும்? வரும் தேர்தலில், தி.மு. கழகமோ, இல்லாவிட்டால் தி. மு. கழகத்தின் ஆதரவுபெற்ற கட்சியோதான் பதவிக்கு வரமுடியும்: வர வேண்டும், வரப் போகிறது.

நிரு, பிறகு?

முர, அதை நான் சொல்லத்தான் வேண்டுமோ?

நிரு, ஆம். 'ஆம்! அண்ணாதுரையும் மற்றவர்களும் ராஜோபசாரத்தோடு விடுதலை செய்யப்படுவார்கள். தி. மு. கழகத்தின்மீது விதிக்கப்பட்ட தடையும் நீங்கும். அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட புதிய திருத்தம் நீக்கப்பட வேண்டும் என்று புதிய தமிழக மாநில அரசாங்கம் டெல்லியை வற்புறுத்தும்,

முர, அது மட்டுமா? அண்ணா அவர்கள் இதற்காக ஒரு தூதுக் குழுவோடு டெல்லி செல்வார்-தமிழகத்தின் முதலமைச்சர்என்கிறமுறையில்!

நிரு: என்ன? அண்ணாதுரை தமிழகத்தின் முதலமைச்சரா?

முர: ஆம், நண்பரே! சிறையிலிருந்தே அண்ணாவும் மற்ற தலைவர்களும் தமிழக சட்டமன்றத்திற்குச் சுயேச்சைகளாக வேட்பாளர் பத்திரம் தாக்கல் செய்து, தி.க.பா.க. துணையுடன் பெருவாரியான ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றியடைவார்களே!

[அப்போது கதவு தட்டப்படும் சத்தம் கேட்கிறது. நிருபர் 'கம் இன்' என்று சொல்ல; ஒரு போலீஸ் அதிகாரி உள்ளே நுழைகிறர்]

முர; நண்பரே! அரசியல் சட்டத்தின் புதிய திருத்தத்தை மீறி, நான் எழுதிய கட்டுரைக்காக என்னைக் கைது செய்ய வந்திருக்கிறர்கள்! வருகிறேன்! ஆனல் நான் விடுதலையாகும் நேரம் தி. மு. கழகமோ அல்லது அதன் வேறொரு அங்கமோ ஆட்சியில் இருக்கும் நேரமாகத்தான் இருக்கும்! வணக்கம்!

[முரசொலி எழுந்து போலீஸ் அதிகாரியோடு செல்ல; நிருபர் வியப்போடு அந்தத் திசையைப் பார்த்தவாறு நிற்கிறர்.]

அஞ்சுகம் பதிப்பகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் 4-128 மவுண்ட்ரோடு, சென்னை 6-ல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. துணை ஆசிரியர் மாறன் எம். ஏ. பதிவு எண்: 7436.